# திருக்குறள் பயில்வோம்

(தமிழ்)

காசி தமிழ் சங்கமம்
काशी तमिल संगमम्
KASHI TAMIL SANGAMAM

## காசித் தமிழ்ச் சங்கமம் 5.0

### திருக்குறள் பயில்வோம் – Thirukkural Abhyas Karen

सत्यमेव जयते

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

2026

# பொருளடக்கம்


| | |
|---|---|
| இயல் 1 – காசியும் தமிழ்நாடும் | 01 |
| இயல் 2 – திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு | 04 |
| இயல் 3 – திருக்குறள் நூலமைப்பும் தனிச்சிறப்பும் | 06 |
| இயல் 4 – உரையாசிரியர்களும் பதிப்பு வரலாறும் | 09 |
| இயல் 5 – வான்மறை வள்ளுவம் | 10 |
| 5.1. திருக்குறளில் அன்பும் அறமும் | 10 |
| 5.2. திருக்குறளில் விருந்தோம்பல் | 13 |
| 5.3. திருக்குறளில் உயிர்நேயம் | 14 |
| 5.4. திருக்குறளில் துறவறம் | 15 |
| 5.5. திருக்குறளில் தனிமனித ஒழுக்கம் | 16 |
| 5.6. திருக்குறளில் தன்னம்பிக்கைச் சிந்தனைகள் | 18 |
| 5.7. திருக்குறளில் கல்வி | 19 |
| 5.8. திருக்குறளில் தலைமைப் பண்புகள் | 20 |
| 5.9. திருக்குறளில் உடல்நலம் | 21 |
| 5.10. திருக்குறளில் மருத்துவ அறம் | 22 |
| 5.11. திருக்குறளில் மனநலம் | 22 |
| 5.12. திருக்குறளில் மனிதநேயம் | 24 |
| 5.13. திருக்குறளில் சமூக நல்லிணக்கம் | 24 |
| 5.14. திருக்குறளில் நட்பு | 25 |
| 5.15. திருக்குறளில் அரசியல் | 26 |
| 5.16. திருக்குறளில் நிருவாகத் திறன் | 27 |
| 5.17. திருக்குறளில் பொருளாதாரச் சிந்தனைகள் | 27 |
| 5.18. திருக்குறளில் உழவு | 28 |
| 5.19. திருக்குறளின் சுற்றுச்சூழல் | 29 |
| 5.20. திருக்குறளில் குடும்ப அறம் | 30 |
| 5.21. திருக்குறளில் மகளிர் | 31 |
| 5.22. திருக்குறளில் மேலாண்மை | 32 |
| 5.23. உலக மொழிகளில் திருக்குறள் | 33 |
| இயல் 6 – குறள் மணிமாலை | 34 |

# இயல் 1 - காசியும் தமிழ்நாடும்

காசியும் தமிழ்நாடும் நீண்ட நெடிய வரலாற்றுத் தொடர்புடையது. காசி என்னும் வாரணாசி குறித்துத் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் கூறுகின்றன. கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, நீலகேசி, சூளாமணி, பெருங்கதை, வில்லிபாரதம், தேவாரம், பெரியபுராணம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், திருப்புகழ், சிவபோகசாரம், திருவிளையாடல் புராணம், காஞ்சிப்புராணம், சிவஞானபாலைய சுவாமிகள் கலம்பகம், திருவருட்பா, வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல், பாரதியார் கவிதை, கவிமணியின் மலரும் மாலையும் போன்றவற்றில் காசி குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. இவைதவிர, கல்வெட்டு, செப்பேடுகளிலும் சான்றுகள் உள்ளன. காசிக்கலம்பகம், காசித் துண்டிவிநாயகர் பதிகம், காசிகாண்டம், காசிரகசியம், காசியாத்திரை, காசிமகாத்மியம் அல்லது சிம்ஹத்வஜன் கதை, காசி விசுவநாத சதகம், ஸ்ரீகாசி யாத்ரா தீபம் போன்ற நூல்கள் காசியைக் குறித்து இயற்றப்பட்டுள்ளன. இவ்வகையில் காசிக்கும், தமிழ்நாட்டிற்கும் காலம்காலமாக இருந்த தொடர்பினை அறியமுடிகின்றது.

அவ்வகையில் வரலாற்றுத் தொடர்புகளை மீட்டறிதல், இரு அறிவுமரபுகளையும் ஓரிடத்தில் இணைத்துக் காணல், இவற்றிடையே காணப்பெற்றத் தொடர்பைப் பகிர்தல், நீண்டகாலமாக நிலவிவந்திருக்கும் நாகரிகப் பண்பாட்டுத் தொடர்ச்சியை வெளிப்படுத்துதல், 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்னும் கருத்தில் பண்பாட்டுக் கலாச்சாரங்களை அறியச் செய்து தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல், அறிவுப் பரிமாற்றத்தை ஊக்குவித்தல், இந்திய அளவில் தமிழ்மொழி மற்றும் செம்மொழி இலக்கியங்களை அறிமுகப்படுத்துதல், இளைஞர்களை இந்தியப் பண்பாட்டு மரபுடன் இணைத்தல், இந்திய மொழிகளுக்கிடையிலான மொழித் தொடர்பைத் தொழில்நுட்பத்தின் துணைகொண்டு ஒருங்கிணைத்தல் எனப் பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு காசித் தமிழ்ச் சங்கமம், இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

காசி மற்றும் தமிழ்நாடு கொண்டிருக்கும் உறவுநிலையை விளக்கும்வகையில் நான்கு காசித் தமிழ்ச் சங்கமங்கள் காசிக்கும் தமிழகத்திற்குமான தொடர்பு, அறிவுசார் மற்றும் பண்பாட்டு உறவுகளை வலுப்படுத்துதல், இந்திய அறிவுமரபில் அகத்திய முனிவரின் பங்களிப்பு, தமிழ் கற்கலாம் ஆகிய கருப்பொருள்களில் நடைபெற்றன. அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு வாரணாசியில், "திருக்குறள் பயில்வோம்" எனும் கருப்பொருளில் 28.11.2026 முதல் 12.12.2026 வரை காசித் தமிழ்ச் சங்கமம் 5.0 நடைபெறுகிறது.

## காசி - தமிழகம்: வரலாற்று இழைகள்

கங்கைக் கரையிலுள்ள காசியும் வைகை, காவிரிக் கரையிலுள்ள தமிழகமும் இந்தியாவின் மிகப் பழமையான அறிவுமையங்கள். இவற்றை இணைத்து நூற்றாண்டுகளாகத் தொடரும் சில இழைகள்:

**குமரகுருபரர் (17ஆம் நூற்றாண்டு)**: தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த இவர் காசியில் குமாரசாமி மடத்தை நிறுவி, கேதார் படித்துறையில் கேதாரேஸ்வரர் கோயிலை எழுப்பினார். 'காசிக் கலம்பகம்' பாடிய இவர் காசியிலேயே இறையடி சேர்ந்தார்.

**மகாகவி பாரதியார்**: 1898 முதல் 1902 வரையுள்ள காலத்தில் காசி அனுமன் படித்துறையில் வாழ்ந்தார். அவர் வாழ்ந்த இல்லம் 'பாரதி இல்லம்' எனப் புதுப்பிக்கப்பட்டு 2022 டிசம்பர் 11 அன்று திறக்கப்பட்டது. 'காசி நகர்ப் புலவர் பேசும் உரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்' என்ற அவரது வரி, வடக்கையும் தெற்கையும் இணைக்கும் கனவு.

**தென்காசி, சிவகாசி**: 'தெற்குக் காசி' என்ற பெயரே இணைப்பைச் சொல்லும். 15ஆம் நூற்றாண்டின் பாண்டிய மன்னர் பராக்கிரம பாண்டியனுடன் இக்கோயில்கள் தொடர்புப்படுத்தப்படுகின்றன. தென்காசிப் பாண்டியரான அதிவீரராம பாண்டியன் 'காசி காண்டம்' பாடினார்.

**நீரெல்லாம் கங்கை, நிலமெல்லாம் காசி**: பாண்டிய மரபில் வழங்கும் இத்தொடரைப் பிரதமர் 2023 சங்கமத் தொடக்க விழாவில் மேற்கோள் காட்டினார்.

**காசி - இராமேஸ்வரம் யாத்திரை**: காசி யாத்திரை இராமேஸ்வர தரிசனத்தாலேயே நிறைவுறும் என்பது நெடுங்கால நம்பிக்கை. தமிழ்த் திருமணச் சடங்கில் இன்றும் 'காசி யாத்திரை' இடம்பெறுகிறது.

**கல்விப் பாலம்**: பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகத்தில் 'சுப்பிரமணிய பாரதி தமிழாய்வு இருக்கை' அமைக்கப்படும் என மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திரமோடி அவர்கள் 11.09.2021 அன்று, பாரதியாரின் நூறாவது நினைவு நாளில் அறிவித்தார்.

## காசித் தமிழ்ச் சங்கமத்தின் பயணம்:
## காசித் தமிழ்ச் சங்கமம் 1.0

"காசிக்கும் தமிழகத்திற்குமான தொடர்பு" என்னும் மையப்பொருண்மையில் காசித் தமிழ்ச் சங்கமம் 1.0 உத்தரப்பிரதேசம், வாரணாசி, பனாரஸ் இந்துப் பல்கலைக்கழக வளாகத்தில் 16.11.2022 முதல் 15.12.2022 வரை நடைபெற்றது.

## காசித் தமிழ்ச் சங்கமம் 2.0

"அறிவுசார் மற்றும் பண்பாட்டு உறவுகளை வலுப்படுத்துதல்" என்னும் மையப்பொருண்மையில் காசித் தமிழ்ச் சங்கமம் 2.0 உத்தரப்பிரதேசம், வாரணாசி, நமோ படித்துறையில் 17.12.2023 முதல் 30.12.2023 வரை நடைபெற்றது.

## காசித் தமிழ்ச் சங்கமம் 3.0

"இந்திய அறிவுமரபில் அகத்திய முனிவரின் பங்களிப்பு" என்னும் மையப்பொருண்மையில் காசித் தமிழ்ச் சங்கமம் 3.0 உத்தரப்பிரதேசம், வாரணாசி, நமோ படித்துறையில் 15.02.2025 முதல் 24.02.2025 வரை நடைபெற்றது.

## காசித் தமிழ்ச் சங்கமம் 4.0

"தமிழ் கற்கலாம்" என்னும் மையப்பொருண்மையில் காசித் தமிழ்ச் சங்கமம் 4.0 உத்தரப்பிரதேசம், வாரணாசி, நமோ படித்துறையில் 02.12.2025 முதல் 15.12.2025 வரை நடைபெற்றது. காசித் தமிழ்ச் சங்கமத்தின் நிறைவு விழா தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்தில் 30.12.2025 அன்று நடைபெற்றது.

## காசித் தமிழ்ச் சங்கமம் 5.0

"திருக்குறள் பயில்வோம்" என்னும் மையப்பொருண்மையில் காசித் தமிழ்ச் சங்கமம் 5.0 உத்தரப்பிரதேசம், வாரணாசி, நமோ படித்துறையில் 28.11.2026 முதல் 12.12.2026 வரை நடைபெறுகிறது. இந்தியா முழுவதும் உள்ள 1,000 கல்லூரி, பல்கலைக்கழகங்களிலிருந்து கல்லூரி, பல்கலைக்கழகத்திற்கு ஒருவர் வீதம் 1,000 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தம் தாய்மொழியிலேயே திருக்குறளைப் பயின்று, தம் கல்லூரிகளிலும் திருக்குறளைப் பரப்புவர்.

திருக்குறள் எந்த ஒரு சமயத்தையோ, அரசனையோ, நாட்டையோ பெயர் சொல்லிக் குறிப்பிடவில்லை. அதனால்தான் அனைவரும் தங்களுடையதாகக் கொண்டாடுகின்றனர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இந்நூலை 35 மொழிபெயர்ப்புகளாக வெளியிட்டுள்ளதோடு, எட்டாம் அட்டவணையின் இருபத்திரண்டு மொழிகளிலும் தன் பன்மொழிச் செயலி வழியே தருகிறது. எனவே காஷ்மீரில் ஒரு மாணவரும் கன்னியாகுமரியில் ஒரு மாணவரும் ஒரே குறளைத் தத்தம் மொழியில் ஒரே நாளில் பயில முடியும்.

# இயல் 2 - திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு

திருவள்ளுவரைப் பற்றி நமக்கு உறுதியாகத் தெரிந்தது ஒன்று, அவர் தந்த 1,330 குறள்கள். அவரது பிறப்பு, குடும்பம், தொழில் பற்றிய செய்திகள் பெரும்பாலும் பிற்கால மரபுக் கதைகளே. ஆயினும் நூலே அதன் ஆசிரியரை மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

## பெயரும் சிறப்புப் பெயர்களும்

'வள்ளுவன்' என்ற பெயருடன் 'திரு' என்ற அடை சேர்ந்து 'திருவள்ளுவர்' ஆனது. மரபு அவருக்குப் பல சிறப்புப் பெயர்களைத் தந்துள்ளது: நாயனார், தேவர், தெய்வப்புலவர், முதற்பாவலர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர், பொய்யில் புலவர். இப்பெயர்கள் அவர்மீது தமிழ்ச் சமூகம் கொண்ட மதிப்பைக் காட்டுகின்றன.

## காலம்: அறிஞர் கருத்துகள்

திருக்குறளின் காலம் கி.மு. 300 முதல் கி.பி. 5ஆம் நூற்றாண்டு வரை பலவாறாகக் கணிக்கப்படுகிறது. செக் அறிஞர் கமில் ஸ்வெலெபில் கி.பி. 450-500 என்றார். பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியம் 6ஆம் நூற்றாண்டு என்றும், சிலர் கி.மு. 1ஆம் நூற்றாண்டு என்றும் கொள்வதாகவும் குறிப்பிடுகிறது. தமிழ்மரபு வள்ளுவர் காலத்தைக் கி.மு. 31 எனக் கொள்கிறது. மறைமலையடிகள் முன்மொழிந்த இந்தக் கணக்கை அடிப்டையாகக் கொண்டு, தமிழ்நாடு அரசு 1971இல் அரசிதழில் 'திருவள்ளுவர் ஆண்டு' முறையை வெளியிட்டது; 1972 முதல் அது நடைமுறைக்கு வந்தது. வள்ளுவர் ஆண்டு = பொது ஆண்டு + 31; தை 2026 முதல் திருவள்ளுவர் ஆண்டு 2057.

## மரபுக் கதைகள்

- பிற்காலத் தனிப்பாடல்களும் வாய்மொழி மரபுகளும் சில கதைகளைத் தருகின்றன. இவற்றுக்கு வரலாற்றுச் சான்றுகள் இல்லை; ஆயினும் இவை மக்கள் மனதில் வள்ளுவர் வாழும் வடிவத்தைக் காட்டுகின்றன.

- சென்னை மயிலாப்பூரில் பிறந்தார் என்பது பரவலான மரபு. அங்கு அவருக்குத் தனிக் கோயில் உண்டு.

- நெசவுத் தொழில் செய்தார் என்றும், அவரது மனைவி வாசுகி என்றும் மரபு கூறுகிறது. கணவர் அழைத்ததும் கிணற்றில் நீர் இறைத்த கயிற்றை அப்படியே விட்டு வந்தார் வாசுகி என்ற கதை, இல்லறத்தின் அன்புக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லப்படுகிறது.

- மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் நூல் அரங்கேறியபோது சங்கப் பலகை குறளுக்கு மட்டும் இடமளித்தது என்றும் ஒரு கதை உண்டு.

- நூலைப் போற்றிப் பாடப்பட்ட ஐம்பத்தைந்து வெண்பாக்களின் தொகுப்பு திருவள்ளுவமாலை. அதில் இடைக்காடர் ‘கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி’ என்றார்; ஔவையார் ‘அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்’ என்று அதை மேலும் நுட்பமாக்கினார்.

## நூலில் தெரியும் ஆசிரியர்

வள்ளுவர் அறம், அரசியல், பொருளியல், போர்முறை, மருத்துவம், காதல் என வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் அறிந்தவர். மனிதனைப் பிறப்பால் அளக்காமல் செயலால் அளக்கிறார். அதனால், சமணர், பௌத்தர், சைவர், வைணவர் எனப் பல மரபினரும் வள்ளுவரைத் தம்மவர் எனக் கொண்டாடுகின்றனர். இந்தப் பல்லுரிமையே அவரது பொதுமைக்குச் சிறந்த சான்று. செவ்வியல் அறிஞர்கள் அவரை இந்தியாவின் பொதுவான அறவியல் மரபின் ஒரு குரலாகக் காண்கின்றனர்.

## நினைவுச் சின்னங்கள்

- **திருவள்ளுவர் தினம்**: தைத் திங்கள் 2ஆம் நாள், பொங்கல் திருநாளின் இடையே கொண்டாடப்படுகிறது.

- **வள்ளுவர் கோட்டம், சென்னை**: 1976 ஏப்ரலில் குடியரசுத் தலைவர் திரு. ஃபக்ருத்தீன் அலி அகமது திறந்துவைத்தார். வடிவமைத்தவர் வை. கணபதி ஸ்தபதி. 1,330 குறள்களும் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன. 2025 ஜூன் 21 அன்று புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டம் மீண்டும் திறக்கப்பட்டது.

- **வள்ளுவர் சிலை**: கன்னியாகுமரியில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை அமைக்கப்பெற்றுள்ளது. அதாவது 133 அதிகாரங்களுக்கு ஒரு அடி. 38 அடி பீடம் அறத்துப்பாலின் 38 அதிகாரங்களையும், 95 அடி சிலை பொருள், இன்பத்தின் 95 அதிகாரங்களையும் குறிக்கின்றன. 01.01.2000அன்று திறக்கப்பட்ட இச்சிலை 2004 ஆழிப்பேரலையையும் தாங்கி நின்றது. வெள்ளி விழாவில், 2024 டிசம்பர் 30 அன்று விவேகானந்தர் பாறையை இணைக்கும் 77 மீட்டர் கண்ணாடிப் பாலம் திறக்கப்பட்டது; சிலை ‘அறிவுச் சிலை’ எனவும் அழைக்கப்படுகிறது.

## இயல் 3 - திருக்குறள் நூலமைப்பும் தனிச்சிறப்பும்

திருக்குறள் 1,330 குறள்களைக் கொண்டது; அவை பத்துப் பத்தாக 133 அதிகாரங்களாகவும், அறம்-பொருள்-இன்பம் என்ற மூன்று பால்களாகவும் பகுக்கப்பட்டுள்ளன. எல்லாக் குறள்களும் இரண்டே அடிகளில், ஏழே சீர்களில் அமைந்த குறள் வெண்பாக்கள்.

### முப்பால் கட்டமைப்பு

| முப்பால் : 133 அதிகாரங்கள் 1,330 குறள்கள் (பரிமேலழகர் உரை அடிப்படையில் அதிகார எண்ணிக்கை) | | |
|---|---|---|
| அறத்துப்பால் | பொருட்பால் | காமத்துப்பால் |
| 38 அதிகாரங்கள் (1-38)<br>380 குறள்கள் | 70 அதிகாரங்கள் (39-108)<br>700 குறள்கள் | 25 அதிகாரங்கள் (109-133)<br>250 குறள்கள் |
| பாயிரவியல்:<br>4 அதிகாரங்கள்<br>இல்லறவியல்:<br>20 அதிகாரங்கள்<br>துறவறவியல்:<br>13 அதிகாரங்கள்<br>ஊழியல்: 1 அதிகாரம் | அரசியல்: 25<br>அதிகாரங்கள்<br>அங்கவியல்: 32<br>அதிகாரங்கள்<br>ஒழிபியல்: 13<br>அதிகாரங்கள் | களவியல்: 7<br>அதிகாரங்கள்<br>கற்பியல்: 18<br>அதிகாரங்கள் |

### அறத்துப்பால் - 38 அதிகாரங்கள்

அறத்துப்பால் தனிமனிதனின் அகவாழ்வையும் குடும்ப வாழ்வையும் பேசுகிறது.

- **பாயிரவியல்** (1-4): கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல். கடவுள் வாழ்த்தை அடுத்துப் பொழியும் மழைக்குத் தனி அதிகாரம் தந்திருப்பது, உயிர்வாழ்வின் அடிப்படை இயற்கையே என்ற வள்ளுவரின் பார்வையைக் காட்டுகிறது.

- **இல்லறவியல்** (5-24): இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு முதல் அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல், நடுவு நிலைமை, பொறையுடைமை, ஒப்புரவறிதல், ஈகை, புகழ் வரை. இல்லறத்தைத் துறவறத்துக்குச் சமமாக, சில இடங்களில் உயர்வாகவும் வள்ளுவர் மதிக்கிறார்.

- **துறவறவியல்** (25-37): அருளுடைமை, புலால் மறுத்தல், வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை, நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல். உலக அறிஞர்களைப் பெரிதும் ஈர்த்த அகிம்சைக் குறள்கள் இவ்வியலிலேயே உள்ளன.

- **ஊழியல்** (38): மனித முயற்சிக்கும் அப்பால் நிற்கும் வினைப்பயனைப் பற்றிய ஒரே அதிகாரம்.

## பொருட்பால் - 70 அதிகாரங்கள்

பொருட்பால் நூலின் பாதிக்கும் மேலான பகுதி; அது அரசியல், நிருவாகம், பொருளாதாரம், நட்பு, சமூகம் ஆகியவற்றைப் பேசுகிறது.

- **அரசியல்** (39-63): இறைமாட்சி, கல்வி, கேள்வி, அறிவுடைமை முதல் செங்கோன்மை, ஒற்றாடல், ஆள்வினை உடைமை, இடுக்கண் அழியாமை வரை. ஆள்பவரின் தனிப்பண்புகளும் நீதியான ஆட்சியும் இங்கு மையம்.

- **அங்கவியல்** (64-95): அமைச்சு, சொல்வன்மை, வினைத்திட்பம், தூது, நாடு, அரண், பொருள் செயல்வகை, படை, நட்பு, பகை, மருந்து. அரசின் உறுப்புகளை ஒவ்வொன்றாக ஆராய்கிறது.

- **ஒழிபியல்** (96-108): குடிமை, மானம், சான்றாண்மை, பண்புடைமை, உழவு, நல்குரவு, இரவு, கயமை. குடிமக்களின் பண்புகள் இங்கு பேசப்படுகின்றன.

## காமத்துப்பால் - 25 அதிகாரங்கள்

காமத்துப்பால் சங்க அகத்திணை மரபில் அமைந்த காதல் நாடகம். தலைவன், தலைவி, தோழி ஆகியோரின் கூற்றுகளாகவே குறள்கள் அமைகின்றன. 'சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்' என்ற தொல்காப்பிய நெறிப்படி எவர் பெயரும் இடம்பெறவில்லை; அதனால் இக்காதல் எல்லாருக்கும் உரியதாகிறது.

- களவியல் (109-115): தகை அணங்குறுத்தல் முதல் அலர் அறிவுறுத்தல் வரை. மணத்திற்கு முந்தைய காதல்.

- கற்பியல் (116-133): பிரிவு ஆற்றாமை முதல் ஊடலுவகை வரை. மணம் கொண்டோரின் பிரிவு, ஏக்கம், ஊடல், கூடல்.

அறம் இல்லாத பொருளும், பொருள் இல்லாத இல்லறமும், அன்பு இல்லாத இன்பமும் வள்ளுவர் பார்வையில் முழுமையானவை அல்ல. மனித வாழ்வின் நான்கு உறுதிப்பொருள்களாக அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை வள்ளுவம் கூறுகிறது. வள்ளுவர் முதல் மூன்றையும் விரிவாகப் பாடி, வீட்டைத் துறவறவியலிலும் மெய்யுணர்தல் அதிகாரத்திலும் உள்ளடக்கினார். இந்தப் பொதுச்

சட்டகமே, இந்தியாவின் எந்தத் திசையிலும் உள்ள வாசகர்க்கும் திருக்குறளை எளிதில் நெருக்கமாக்குகிறது.

## குறள் வெண்பா யாப்பு

- அடி: இரண்டு. முதலடியில் நான்கு சீர், ஈற்றடியில் மூன்று சீர்; மொத்தம் ஏழு சீர்கள்.
- தளை: வெண்டளை. ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாடுகளுள் ஒன்றாக முடியும்.
- சீர் பிரிப்பு - குறள் 1: அகர | முதல | எழுத்தெல்லாம் | ஆதி

பகவன் | முதற்றே | உலகு.

இந்தச் சுருக்கமே குறளின் வலிமை. ஔவையார் இதனை 'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டியது' போன்றது என்றார். நினைவில் நிற்பதற்கும், மொழிபெயர்ப்பதற்கும், இன்று சமூக ஊடகங்களில் பகிர்வதற்கும் குறள் ஏற்ற வடிவம்.

## திருக்குறளின் சிறப்புப் பெயர்கள்

முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, பொதுமறை ஆகியன திருக்குறளின் சிறப்புப் பெயர்கள் ஆகும். 'பொதுமறை' என்ற பெயருக்குக் காரணம் இதன் உள்ளடக்கமே. பிரெஞ்சு மொழிபெயர்ப்பாளர் இ. எஸ். ஏரியல் கூறியதுபோல, வள்ளுவர் 'சாதி, மக்கள், நம்பிக்கை எதையும் பொருட்படுத்தாமல் மனிதகுலம் முழுவதற்கும்' பேசுகிறார்.

## இயல் 4 – உரையாசிரியர்களும் பதிப்பு வரலாறும்

திருக்குறளுக்குப் பத்தாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதியார், பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் எனப் பத்து உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளனர். இவற்றுள் முழுமையாக மணக்குடவர், பரிதியார், காளிங்கர், பரிப்பெருமாள், பரிமேலழகர் ஆகியோரது உரை முழுமையாகவும், தருமர், தாமத்தர், நச்சர் ஆகியோரது உரை பகுதியாகவும் கிடைக்கின்றன. திருமலையர், மல்லர் ஆகியோரது உரைகள் தற்போது கிடைத்தில. திருக்குறளைப் பல நூற்றாண்டுகளாகக் காத்து இன்றைய தலைமுறைக்கு அளித்திருப்பது உரை மரபே.

### இக்கால உரைகள்

19-20ஆம் நூற்றாண்டுகளில் கவிராஜ பண்டிதர், உ. வே. சாமிநாதையர், க. வடிவேலு செட்டியார், அயோத்திதாசர், வ.உ. சிதம்பரனார், திரு.வி.க., நாமக்கல் கவிஞர், பாரதிதாசன் உள்ளிட்டோர் திருக்குறளுக்கு உரை வகுத்துள்ளனர். எளிய தெளிவுரை மரபு 1949இல் மு. வரதராசனாரின் ‘திருக்குறள் தெளிவுரை’யுடன் தொடங்கியது. தற்காலத்திலும் திருக்குறளுக்கு உரை தொடர்ந்து எழுதப்பெற்று வருகின்றது.

### ஓலைச்சுவடியிலிருந்து அச்சுக்கு

நூற்றாண்டுகளாகத் திருக்குறள் ஓலைச்சுவடிகளில் படியெடுத்துப் பாதுகாக்கப்பட்டது. 1812இல் தஞ்சை ஞானப்பிரகாசர் நாலடியாருடனும் திருவள்ளுவமாலையுடனும் சேர்த்து முதல் அச்சுப் பதிப்பை வெளியிட்டார். அன்று முதல் இன்று வரை நூற்றுக்கணக்கான பதிப்புகள் வந்துள்ளன.

### எண்ணிமக் காலம்

இன்று திருக்குறள் நூல் முழுமையும், பன்மொழிச் செயலிகள், ஒலி நூல்கள் எனப் புதிய பரிமாணங்களில் இணையத்திலும், திறன்பேசிகளிலும் கிடைக்கின்றன.

## இயல் 5 – வான்மறை வள்ளுவம்

இந்த இயல், திருக்குறளின் 108 அதிகாரங்களின் மையப்பொருண்மைகளைக் குறித்த அறிமுகமாக ஒன்று முதல் இருபத்துமூன்று தலைப்புகளில் அமைக்கப்பட்டிருக்கிறது.

## 5.1. திருக்குறளில் அன்பும் அறமும்

உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் திருக்குறள், மனித வாழ்வின் அடிப்படை விழுமியங்களை மிகச் செறிவாகவும் ஆழமாகவும் எடுத்துரைக்கும் வாழ்வியல் இலக்கியமாகும். மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை மட்டுமன்றி, எத்தகைய மனநிலையுடன் வாழ வேண்டும் என்பதையும் திருவள்ளுவர் விளக்குகிறார். அந்த வாழ்வியல் சிந்தனையின் மையத்தில் அன்பும் அறமும் நிற்கின்றன. அன்பு அறத்தின் உயிராகவும், அறம் அன்பின் செயலாக்கமாகவும் திருக்குறளில் வெளிப்படுகின்றன.

### அன்பு - மனித வாழ்வின் அடித்தளம்

திருவள்ளுவர் அன்பை வெறும் உணர்ச்சியாகக் கருதவில்லை; மனிதனைத் தன்னலத்திலிருந்து பொதுநலத்திற்கு உயர்த்தும் அடிப்படைப் பண்பாகக் காண்கிறார்.

*அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு. (குறள் 72)*

அன்பில்லாதவர் தம்மை மட்டுமே மையமாகக் கொண்டு வாழ்கிறார்; அன்புடையவர் தம்மையே பிறருக்காக வழங்கும் மனப்பக்குவம் பெறுகிறார். இவ்வாறு ‘நான்’ என்ற குறுகிய உணர்வை ‘நாம்’ என்ற பரந்த உணர்வாக மாற்றுவது அன்பு. குடும்பத்தில் பாசமாகவும், சமூகத்தில் பரிவாகவும், உலகளவில் மனிதநேயமாகவும் அது விரிவடைகிறது.

*அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு*
*என்புதோல் போர்த்த உடம்பு. (குறள் 80)*

உடல் உயிருடன் இருப்பது மட்டுமே வாழ்க்கையன்று; பிற உயிர்களின் மகிழ்ச்சியையும் துன்பத்தையும் உணரும் மனம் இருக்கும்போதுதான் வாழ்க்கை பொருள் பெறுகிறது. எனவே, திருவள்ளுவரின் பார்வையில் அன்பு என்பது மனிதனின் ஒரு பண்பு மட்டுமன்று; மனித வாழ்வின் உயிர்நாடி.

### அன்பும் அறமும்

அன்புக்கும் அறத்திற்கும் இடையிலான பிரிக்க முடியாத உறவை,

*அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது. (குறள் 45)*

என்ற குறள் உணர்த்துகிறது. இல்வாழ்க்கையின் பெருமை செல்வத்திலோ அதிகாரத்திலோ இல்லை; அன்பும் அறமும் நிறைந்த வாழ்வில்தான் உள்ளது. இங்கு அன்பு உள்ளத்தின் பண்பாகவும், அறம் அதன் செயல்வடிவமாகவும் அமைகிறது.

அன்புடையவன் பிறருக்குத் தீங்கு செய்ய விரும்பமாட்டான். பிறரின் துன்பத்தைத் தன் துன்பமாக உணர்பவனிடமிருந்து இயல்பாகவே ஈகை, விருந்தோம்பல், இன்னா செய்யாமை, கொல்லாமை, அருளுடைமை போன்ற அறங்கள் தோன்றுகின்றன. ஆகவே, திருக்குறள் கூறும் அறம் வற்புறுத்தலால் கடைப்பிடிக்கப்படும் ஒழுக்கம் அல்ல; அன்பிலிருந்து இயல்பாகப் பிறக்கும் வாழ்க்கை நெறி. இதனை,

*அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்*
*மறத்திற்கும் அஃதே துணை. (குறள் 76)*

என்று வள்ளுவர் மேலும் ஆழப்படுத்துகிறார். அன்பு மென்மையின் அடையாளம் மட்டுமல்ல; கடமையைச் செய்யவும், பிறருக்காகத் தியாகம் செய்யவும், நியாயத்தின் பக்கம் துணிவுடன் நிற்கவும் தூண்டும் உள்ளார்ந்த வலிமையாகவும் அமைகிறது.

## அறம் - மனத்தூய்மையிலிருந்து தொடங்குவது

திருவள்ளுவரின் அறச்சிந்தனை வெளிப்புறச் செயல்களை மட்டும் சார்ந்ததன்று. அகத்தைச் சார்ந்தது. அறத்தின் தொடக்கம் மனித மனமே. ஆதலின்

*மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*
*ஆகுல நீர பிற. (குறள் 34)*

என மனத்தில் மாசற்ற தன்மையே அறத்தின் அடிப்படை என வள்ளுவர் கூறுகிறார். ஒரு செயல் வெளிப்பார்வைக்கு நல்லதாகத் தோன்றினாலும், அதன் பின்னால் வஞ்சகம், பொறாமை, பேராசை அல்லது புகழாசை இருந்தால் அதன் அறமதிப்பு குறைகிறது. எனவே, அறம் என்பது மனிதன் என்ன செய்கிறான் என்பதில் மட்டுமல்ல; ஏன் செய்கிறான் என்பதிலும் உள்ளது. அறத்தின் உயர்வை,

*அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை*
*மறத்தலின் ஊங்கில்லை கேடு. (குறள் 32)*

என்று திருவள்ளுவர் நிறுவுகிறார். செல்வமும் அதிகாரமும் நிலையற்றவை; ஆனால் அறத்தால் பெறப்படும் மனித மதிப்பு நிலையானது. அறத்தை மனித வாழ்வின் உயர்ந்த செல்வமாக வள்ளுவர் காண்பதன் காரணமும் இதுவே.

## அன்பிலிருந்து அருளுக்கு

திருக்குறளின் அன்பு குடும்பத்தோடும் உறவினர்களோடும் நின்றுவிடுவதில்லை. அது பிற மனிதர்களையும் கடந்து அனைத்து உயிர்களையும் தழுவும்போது அருள் என்ற உயர்ந்த நிலையை அடைகிறது.

*அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்*
*பூரியார் கண்ணும் உள. (குறள் 241)*

பொருட்செல்வத்தைவிட பிற உயிர்களின் துயரை உணரும் அருட்செல்வமே உயர்ந்தது. இவ்வகையில் திருக்குறளின் அன்பியல், தனிமனித அன்பு - குடும்ப அன்பு - சமூக அன்பு - உயிர்நேயம் என விரிவடைகிறது. அதனால்தான்,

*தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ*
*மன்னுயிர்க்கு இன்னா செயல். (குறள் 318)*

என்று வள்ளுவர் கேட்கிறார். தனக்கு வலி என்ன என்பதை உணர்ந்தவன் அதையே பிற உயிர்களுக்கு எவ்வாறு செய்யமுடியும் என்ற இக்கேள்வியில் அறத்தின் ஆழமான அடிப்படை வெளிப்படுகிறது. தன்னைப் பிறரின் நிலையில் வைத்துப் பார்க்கும் மனமே உண்மையான அறத்தின் தொடக்கம்.

## இன்றைய உலகிற்கான செய்தி

அறிவியல், தொழில்நுட்பம், பொருளாதாரம் ஆகியவற்றில் மனித சமூகம் பெரும் வளர்ச்சி கண்டுள்ள போதிலும், வெறுப்பு, வன்முறை, சுயநலம், பாகுபாடு போன்ற சிக்கல்கள் தொடர்கின்றன. இந்நிலையில் திருக்குறளின் அன்பும் அறமும் பழங்காலக் கருத்துகளாக அல்லாமல், இன்றைய உலகிற்கும் தேவையான மனிதநேய நெறிகளாகத் திகழ்கின்றன.

அறிவு மனிதனுக்கு ஆற்றலை வழங்குகிறது; அந்த ஆற்றலை நன்மைக்குப் பயன்படுத்த அறம் வழிகாட்டுகிறது. தொழில்நுட்பம் மனிதர்களை இணைக்கிறது; அன்புதான் அவர்களின் உள்ளங்களை இணைக்கிறது. சட்டம் தவறைத் தடுக்கிறது; அறம் தவறு செய்யாத மனத்தை உருவாக்குகிறது.

திருக்குறளில் அன்பும் அறமும் தனித்தனியான இரண்டு கோட்பாடுகள் அல்ல. அன்பு அறத்தின் வேராகவும், அறம் அன்பின் கனியாகவும் விளங்குகின்றன. அன்பு மனிதனைத் தன்னலத்திலிருந்து விடுவிக்கிறது; அறம் அவனைப் பொதுநலத்தை நோக்கி வழிநடத்துகிறது. அன்பு அருளாக விரிவடையும் போது மனிதன் அனைத்து உயிர்களையும் தன்னோடு இணைத்துப் பார்க்கிறான்.

எனவே, திருவள்ளுவர் காட்டும் அறவாழ்வு அச்சத்தால் கடைப்பிடிக்கப்படும் ஒழுக்கமன்று; அன்பிலிருந்து இயல்பாக மலரும் உயர்ந்த வாழ்க்கை நெறியாகும். அன்பு மனிதனை மனிதனாக்குகிறது; அறம் அந்த மனிதனை உயர்ந்த மனிதனாக்குகிறது. இவ்விரண்டும் இணையும் இடத்தில்தான் தனிமனித அமைதி, குடும்ப நலம், சமூக ஒற்றுமை, உலக மனிதநேயம் ஆகியவை மலர்கின்றன.

# 5.2. திருக்குறளில் விருந்தோம்பல்

தமிழர் பண்பாட்டின் உயரிய அடையாளங்களுள் ஒன்று விருந்தோம்பல். அறிமுகமில்லாதவராக இருந்தாலும் இல்லம் தேடி வந்தவரை இன்முகத்துடன் வரவேற்று, உணவளித்து, அன்புடன் பேணுவது தமிழரின் வாழ்வியல் மரபாகும். திருவள்ளுவர் இதனை ஒரு சமூகப் பழக்கமாக மட்டும் கருதாமல், இல்லறத்தின் அடிப்படை அறமாக உயர்த்துகிறார். திருக்குறளில் விருந்தோம்பலுக்கென ஓர் அதிகாரமே அமைத்து, விருந்தினரைப் பேணுவதன் உயர்வை எடுத்துரைக்கிறார்.

## இல்லறத்தின் பயன் - விருந்தோம்பல்

*இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி*
*வேளாண்மை செய்தற் பொருட்டு. (குறள் 81)*

ஒருவன் பொருளீட்டி, அதைப் பேணி, குடும்பம் நடத்துவதன் நோக்கம் தானும் தன் குடும்பமும் மட்டும் வாழ்வதற்காக அன்று; பிறருக்கும் பயன்படுவதற்காகவே என்கிறார் வள்ளுவர். இங்கு விருந்தோம்பல் என்பது உணவளிப்பதைத் தாண்டி, தனக்குள்ளதைப் பிறருடன் பகிர்ந்து வாழும் சமூக அறமாக அமைகிறது.

விருந்தினர் புறத்தே இருக்கும்போது அமிழ்தமாக இருப்பினும் தாம் மட்டும் உண்பது விரும்பத்தக்கது அல்லவென்பதை,

*விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா*
*மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. (குறள் 82)*

என்ற குறள்வழி வள்ளுவர் உரைக்கிறார். தாம் பெற்றதைத் தமக்காக மட்டுமே வைத்துக்கொள்வது செல்வத்தின் உண்மையான பயன் அல்ல என்பதே இதன் உட்பொருள்.

## உணவைவிட உயர்ந்தது இன்முகம்

விருந்தோம்பலில் உணவு மட்டுமே முக்கியமன்று; அதை வழங்கும் மனநிலையும் முகமலர்ச்சியும் முக்கியம்.

*மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து*
*நோக்கக் குழையும் விருந்து. (குறள் 90)*

முகர்ந்தவுடன் வாடிவிடும் அனிச்ச மலரைப்போல், முகம் மாறி வரவேற்றால் விருந்தினரின் உள்ளமும் வாடிவிடும் என்கிறார் வள்ளுவர். ஒருவர் வழங்கும் பொருளின் அளவைவிட, "நீங்கள் எங்களுக்கு வேண்டியவர்" என்ற உணர்வை விருந்தினருக்கு ஏற்படுத்துவதே உண்மையான விருந்தோம்பல் என்பதை நுட்பமாக உணர்த்துகிறார்.

### சமூக உறவின் அடிப்படை

விருந்தோம்பல் மனிதர்களுக்கிடையேயான இடைவெளியைக் குறைக்கிறது. புதியவரை உறவினராக மாற்றுகிறது; தனிமனிதனைச் சமூகத்துடன் இணைக்கிறது. அதனால் விருந்தோம்பலைத் தனிப்பட்ட நல்லொழுக்கமாக மட்டுமன்றி, சமூக ஒற்றுமையை உருவாக்கும் பண்பாகவும் காணலாம். இல்லறத்தின் மிகச்சிறந்த கடமையாக விருந்தோம்பல் போற்றப்பெற்றது என்பதனை,

*இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி*
*வேளாண்மை செய்தற் பொருட்டு. (குறள் 81)*

என்னும் குறள் எடுத்துரைக்கின்றது. இன்றைய நகரமயமான, தனிமனித மைய வாழ்க்கையிலும் இச்சிந்தனை பொருத்தமானது. விருந்தோம்பலின் நவீன வடிவம் உணவளிப்பதில் மட்டும் இல்லை; பிறரை மதித்தல், புதியவரை ஏற்றுக்கொள்ளுதல், உதவி தேவைப்படுபவருக்குத் துணைநிற்றல் ஆகியவற்றிலும் உள்ளது.

திருக்குறளில் விருந்தோம்பல் என்பது உணவு வழங்கும் செயல் அல்ல; உள்ளத்தைப் பகிரும் அறம். செல்வத்தின் சிறப்பு அதன் உடைமையில் இல்லை; பகிர்தலில் உள்ளது. இல்லத்தின் பெருமை அதன் வசதிகளில் இல்லை; அங்கு வருபவர் பெறும் அன்பில் உள்ளது. ஆகவே, விருந்தோம்பலின் வழியாகத் திருவள்ளுவர் “தனக்காக வாழ்வதிலிருந்து பிறருக்காகவும் வாழ்வதே உயர்ந்த இல்லறம்” என்ற மனிதநேயச் சிந்தனையை நிறுவுகிறார்.

## 5.3. திருக்குறளில் உயிர்நேயம்

மனிதனை மட்டும் மையப்படுத்தாமல், அனைத்து உயிர்களையும் மதித்து வாழ வேண்டும் என்ற பரந்த அறச்சிந்தனை திருக்குறளில் காணப்படுகிறது. அருளுடைமை, புலால் மறுத்தல், கொல்லாமை, இன்னா செய்யாமை போன்ற அதிகாரங்கள் வழியாக உயிர்களின் வாழ்வுரிமையை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

### உயிரைத் தன்னுயிராகக் காணுதல்

*தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்*
*எங்ஙனம் ஆளும் அருள். (குறள் 251)*

தன் உடலை வளர்ப்பதற்காக மற்றோர் உயிரைக் கொன்று இறைச்சியை உண்பவன் எவ்வாறு அருளுடையவனாக இருக்க முடியும் என்று வள்ளுவர் கேட்கிறார். தன் வாழ்வைப் போலவே பிற உயிர்களின் வாழ்வையும் மதிக்கிறோமா? என உணவுமுறை பற்றிய கருத்தைத் தாண்டிய ஓர் அடிப்படை அறவியல் கேள்வியையும் முன்வைக்கிறார்.

*அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்*
*பொருளல்லது அவ்வூன் தினல். (குறள் 254)*

அருளின் அடிப்படையாகவே கொல்லாமையை வள்ளுவர் நிறுவுகிறார்.

### உயிர்நேயத்தின் உச்சம்

பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் வாழ்பவனே உயர்ந்த மனிதன் என்ற எண்ணத்தை,

*கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*எல்லா உயிரும் தொழும். (குறள் 260)*

இக்குறள் வெளிப்படுத்துகிறது. உயிர்களுக்காக வருந்துவது மட்டும் போதாது என்பதனை,

*உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதுஒன்றன்*
*புண்அது உணர்வார்ப் பெறின். (குறள் 257)*

என்னும் குறள் எடுத்துரைத்து, அவ்வுயிரின் துன்பத்தை மனத்தால் உணர்வதே உயிர்நேயம் என விளக்குகின்றது. துன்பம் ஏற்படுத்தாத வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதே இந்த அதிகாரம் உணர்த்தும் ஆழமான செய்தி.

இன்றைய சூழலில் விலங்குகள் பாதுகாப்பு, உயிரினப் பன்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற கருத்துகளோடும் இச்சிந்தனையைப் பொருத்திப் பார்க்க முடிகிறது. மனிதன் இயற்கையை ஆளுபவன் அல்ல; அதன் உயிர்ச் சங்கிலியின் ஓர் அங்கம் என்ற புரிதலுக்கு வள்ளுவரின் உயிர்நேயம் வழிவகுக்கிறது.

திருக்குறளில் உயிர்நேயம் என்பது மனிதர்மீது காட்டப்படும் அன்பின் நீட்சியாகும். தன்னுயிரைப் போற்றுவது போல மன்னுயிரையும் போற்றுதல் என்பது குறள் கூறும் நெறி. மனிதனின் உயர்வு அவனது வலிமையில் இல்லை; தன்னைவிட வலிமை குறைந்த உயிர்களிடமும் அவன் காட்டும் அருளில்தான் உள்ளது. இவ்வகையில் திருக்குறள் அனைத்து உயிர்களையும் உள்ளடக்கிய பரந்த அறவியலை முன்வைக்கிறது.

## 5.4. திருக்குறளில் துறவறம்

திருக்குறளின் அறத்துப்பாலில் இல்லறத்தைத் தொடர்ந்து துறவறம் சார்ந்த அறநெறிகள் இடம்பெறுகின்றன. துறவு என்பது உலகத்திலிருந்து உடலளவில் விலகுவது மட்டுமன்று; ஆசை, பற்றுதல், சினம், அகந்தை போன்ற மனக்கட்டுப்பாடுகளை வெல்வது என்ற ஆழமான பொருளையும் திருக்குறளின் பல அதிகாரங்கள் வெளிப்படுத்துகின்றன. அறத்துப்பாலின் அதிகாரங்கள் இல்லறவியல், துறவறவியல் என உரைமரபில் பகுக்கப்பட்டுள்ளன.

### பற்றினை விடுதல்

மனிதனின் துன்பங்களில் பலவற்றிற்கு அளவுக்கு மீறிய பற்றுதலே காரணமாகிறது. பொருள், புகழ், அதிகாரம் ஆகியவை வாழ்க்கைக்கான கருவிகளாக இருக்க வேண்டுமே தவிர மனிதனை ஆளும் சக்திகளாக மாறக்கூடாது. இவற்றைத் தன் வாழ்க்கையில், பின்பற்ற இறைவனது அருள் மிகவும் இன்றியமையாதது; அருளைப்

பெறுவதற்குப் பிற பற்றுகளை விடுத்து, இறைவனது தாளைப் பற்றுதல் வேண்டும்.

*பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு. (குறள் 350)*

உண்மையான துறவு உடையிலும் தோற்றத்திலும் இல்லை; உள்ளத்தில் உள்ளது. ஆசையை அடக்காமல் வெளிப்புறத்தில் துறவியாகத் தோன்றுவதால் பயனில்லை. எனவே திருவள்ளுவரின் துறவறம் தன்னைக் கட்டுப்படுத்தும் அகநிலைப் பயிற்சி.

### துறவும் அருளும்

திருக்குறளின் துறவறச் சிந்தனை சமூகத்திலிருந்து மனிதனைப் பிரிப்பதில்லை. மாறாக அருள், தவம், வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை போன்ற பண்புகள் வழியாக அவனை மேலும் பொறுப்புடையவனாக்குகிறது.

தனது ஆசைகளை வென்றவன் பிறருடைய உரிமையைப் பறிக்கமாட்டான்; சினத்தை வென்றவன் பிறரைத் துன்புறுத்தமாட்டான்; அகந்தையை வென்றவன் பிற உயிர்களைத் தாழ்வாகக் கருதமாட்டான். எனவே துறவு என்பது உலகத்தை வெறுப்பதல்ல; தன்னுள் உள்ள அளவற்ற ஆசையை வெல்வது.

நுகர்வு, போட்டி, பொருளாசை ஆகியவை அதிகரித்துள்ள இன்றைய வாழ்க்கையில் திருக்குறளின் துறவறச் சிந்தனை புதிய பொருளைப் பெறுகிறது. தேவைக்கும் ஆசைக்கும் உள்ள வேறுபாட்டை உணர்தல், அளவுடன் வாழ்தல், மனக்கட்டுப்பாடு, எளிமை ஆகியவை நவீன வாழ்விலும் இன்றியமையாதவை.

திருக்குறள் காட்டும் துறவு உலகத்தை விட்டு ஓடுவது அன்று; உலகில் வாழ்ந்துகொண்டே உள்ளத்தை வெல்வது. பொருளைத் துறப்பதைவிடப் பற்றைத் துறத்தலும், பிறரை வெல்வதைவிடத் தன்னை வெல்வதுமே உயர்ந்த துறவு. இவ்வகையில் துறவறத்தை மனிதனின் அகத்தூய்மைக்கும் மனவிடுதலைக்கும் வழிவகுக்கும் வாழ்வியல் நெறியாகத் திருவள்ளுவர் உணர்த்துகிறார்.

## 5.5. திருக்குறளில் தனிமனித ஒழுக்கம்

ஒரு நல்ல சமூகத்தின் அடிப்படை நல்ல மனிதர்களே. சட்டங்களால் மட்டும் சமூகத்தைச் செம்மைப்படுத்த முடியாது; ஒவ்வொரு மனிதனிடமும் தன்னடக்கம், நேர்மை, பொறுப்புணர்வு, பணிவு போன்ற பண்புகள் நிலைபெற வேண்டும். திருக்குறள் இதனை தனிமனித ஒழுக்கம் என்ற பரந்த வாழ்வியல் நோக்கில் எடுத்துரைக்கிறது.

### ஒழுக்கமே உயர்வு

மனிதனுக்கு உயர்வைத் தருவது அவனது செல்வமோ பதவியோ அன்று; ஒழுக்கமே. அதனால்தான் உயிரைவிடவும் ஒழுக்கத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதை,

*ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும். (குறள் 131)*

என்ற குறளில் உணர்த்துகிறார் வள்ளுவர். அறிவும் திறமையும் ஒருவனை முன்னேற்றலாம். ஆனால் அந்த முன்னேற்றத்தை மதிப்புடையதாக மாற்றுவது ஒழுக்கம். அறிவுடையவன் ஒழுக்கமற்றவனாக இருந்தால் அவனுடைய அறிவே சமூகத்திற்குத் தீங்காக மாறக்கூடும்.

## தன்னடக்கம் - ஒழுக்கத்தின் காவல்

தனிமனித ஒழுக்கத்தின் மையமாகத் தன்னடக்கத்தை வள்ளுவர் முன்வைக்கிறார். எண்ணம், சொல், செயல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் திறனே அடக்கம். உணர்ச்சிக்கு உடனடியாக அடிமையாகாமல், அதன் விளைவுகளை எண்ணிச் செயல்படுவதே முதிர்ந்த மனத்தின் அடையாளம் என்ற கருத்துகளை உணர்த்துவதாக,

*அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை*
*ஆரிருள் உய்த்து விடும். (குறள் 121)*

என்னும் குறள் எடுத்துரைக்கின்றது. அதேபோல் ஒருவரின் சொற்களும் அவரது ஒழுக்கத்தின் அளவுகோலாகின்றன.

*தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினால் சுட்ட வடு. (குறள் 129)*

என்ற குறளில் உடலில் ஏற்பட்ட காயம் ஆறிவிடலாம்; ஆனால் சொல்லால் ஏற்படுத்தப்பட்ட மனக்காயம் நீண்ட காலம் நிலைக்கும் என உண்மையை எடுத்துரைக்கின்றார். எனவே, தனிமனித ஒழுக்கம் செயலை மட்டும் கட்டுப்படுத்துவது அன்று; சிந்தனை, பேச்சு, உணர்ச்சி ஆகிய அனைத்தையும் செம்மைப்படுத்துவது.

## தனிமனிதனிலிருந்து சமூகத்திற்கு

ஒருவர் ஒழுக்கமாக வாழ்வதன் பயன் அவருக்கு மட்டும் கிடைப்பதில்லை. நல்ல குடும்பங்கள் நேர்மையான தனிமனிதர்களால் உருவாக்குகின்றன; நல்ல குடும்பங்கள் நல்ல சமூகத்தை உருவாக்குகின்றன; நல்ல சமூகமே பொறுப்பான நாட்டை உருவாக்குகிறது. ஆகவே சமூக மாற்றத்தின் தொடக்கம் தனிமனிதனிடமே இருக்கிறது.

இன்றைய இணைய மற்றும் சமூக ஊடகக் காலத்தில் தனிமனித ஒழுக்கத்தின் பரப்பு மேலும் விரிந்துள்ளது. நேரில் சொல்லத் தயங்கும் ஒன்றை இணையத்தில் எழுதாமல் இருப்பது, தவறான தகவலைப் பரப்பாமல் இருப்பது, பிறரது தனியுரிமையை மதிப்பது போன்றவையும் ஒழுக்கத்தின் வடிவங்களாகக் கொள்ளலாம்.

திருக்குறளில் தனிமனித ஒழுக்கம் என்பது வெளிப்புறக் கட்டுப்பாடு அன்று; தன்னைத் தானே நெறிப்படுத்திக் கொள்ளும் அகக்கட்டுப்பாடு. அடக்கம், இனிய சொல், நேர்மை, பொறுமை, பணிவு ஆகிய பண்புகள் மனிதனின் உண்மையான மதிப்பை நிர்ணயிக்கின்றன. மனிதன் உலகை மாற்றுவதற்குமுன் தம்மைச் செம்மைப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதே வள்ளுவரின் கருத்து. தனிமனித ஒழுக்கமே சமூக ஒழுக்கத்தின் முதல் விதை என்பதால் திருக்குறளின் இச்சிந்தனை என்றும் பொருந்தக்கூடியதாகிறது.

## 5.6. திருக்குறளில் தன்னம்பிக்கைச் சிந்தனைகள்

'தன்னம்பிக்கை' என்ற சொல்லைத் திருவள்ளுவர் நேரடியாகப் பயன்படுத்தாவிட்டாலும் ஊக்கம், மனத்திண்மை, முயற்சி, வினைத்திட்பம், இடுக்கண் அழியாமை போன்ற அதிகாரங்களில் தன்னம்பிக்கைக்கான கருத்துகள் இடம்பெற்றுள்ளன. மனிதனின் உயர்வும் தாழ்வும் பெருமளவில் அவனது மனத்தின் வலிமையையும் முயற்சியையும் சார்ந்தவை என்பதே வள்ளுவரின் பார்வை. எனவே, ஒருவனது மனத்தின் அளவிலேயே அவனது உயர்வு அமையும் என்பதனை,

*வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்*
*உள்ளத் தனையது உயர்வு. (குறள் 595)*

என்ற குறளில் பதிவுசெய்துள்ளார். நீரின் ஆழத்திற்கேற்ப தாமரைத் தண்டு உயர்வதைப்போல, மனிதனின் உயர்வு அவனது உள்ளத்தின் உயர்வைப் பொறுத்தது. உயர்ந்த இலட்சியமும் நம்பிக்கையும் மனித முன்னேற்றத்தின் தொடக்கம் என்பதை இக்குறள் உணர்த்துகிறது.

### மனத்திண்மையும் வெற்றியும்

ஒருவன் வாழ்க்கையில் குறிக்கோளை அடைவதற்கு இலக்கை நிர்ணயிப்பது மட்டும் போதாது; அதை அடைவதற்கான மனத்திண்மையும் வேண்டும். எண்ணமும் செயலும் ஒன்றிணையும் இடத்தில்தான் வெற்றி உருவாகிறது. இதனை வெளிப்படுத்தும் வகையில் வள்ளுவர்,

*எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணியர் ஆகப் பெறின். (குறள் 666)*

என்னும் குறள் வாயிலாகத் தெளிவுபடுத்துகின்றார். தோல்விகளால் மனம் தளராமல் செயல்படுவதையும் வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

*துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி*
*இன்பம் பயக்கும் வினை. (குறள் 669)*

எடுக்கும் செயலில் எத்தகைய இடையூறுகள் நிகழினும் அச்செயலைக் கைவிடாது தொடர்ந்து ஈடுபட்டு வெற்றியை எய்தவேண்டும். தன்னம்பிக்கை என்பது தடைகளை மட்டும் நினைப்பதில்லை; தடைகள் இருந்தாலும் அவற்றைக் கடக்க முடியும் என்ற மனநிலை.

### முயற்சியின் மதிப்பு

ஊழினால் ஒரு செயலில் வெற்றி பெறவில்லையென்றாலும், அச்செயலைச் செய்ய மேற்கொள்ளும் முயற்சியால் வெற்றி அடையலாம் என்பதனை வள்ளுவம்,

*தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்*
*மெய்வருத்தக் கூலி தரும். (குறள் 619)*

என்கின்றது. எதிர்பார்த்த முழு வெற்றி கிடைக்காவிட்டாலும் உண்மையான முயற்சி வீணாகாது என்ற சிந்தனை இக்குறளில் உள்ளது. இதனால் தன்னம்பிக்கை என்பது வெறும் நேர்மறை எண்ணமல்ல; முயற்சியோடு இணைந்த செயல்நம்பிக்கை.

திருக்குறளின் பார்வையில் தன்னம்பிக்கை என்பது அகந்தை அன்று; தன் ஆற்றலை உணர்ந்து, இலக்கைத் தெளிவுபடுத்தி, விடாமுயற்சியுடன் செயல்படும் மனத்திண்மை. "முடியும்" என்ற எண்ணத்துடன் "முயல்வேன்" என்ற செயலும் இணையும்போதுதான் மனிதனின் ஆற்றல் முழுமை பெறுகிறது.

## 5.7. திருக்குறளில் கல்வி

திருவள்ளுவர் கல்வியை வெறும் அறிவுச் சேகரிப்பாகக் காணவில்லை. அது மனிதனின் பார்வையை விரிவுபடுத்தி, நடத்தையைச் செம்மைப்படுத்தி, வாழ்நாள் முழுவதும் துணைநிற்கும் செல்வமாக அமைய வேண்டும் என்கிறார்.

***கற்க கசடறக் கற்பவை கற்றபின்***
***நிற்க அதற்குத் தக.** (குறள் 391)*

கற்க வேண்டியவற்றைக் கற்க, கற்றபின்னர் அதற்கேற்ப வாழ்க்கையை நடத்துக என்பது வள்ளுவர் காட்டும் கற்றல் நெறி. கற்றல் என்பது தகவல்களை நினைவில் வைத்திருப்பது மட்டுமன்று. தெளிவாகக் கற்று, கற்ற நெறிக்கு ஏற்ப வாழ்வதே உண்மையான கல்வி.

### கல்வி - மனிதனின் கண்கள்

கல்வி கண்போன்றது. அத்தகைய கல்வியைப் பெறுவதே மனிதவாழ்வின் குறிக்கோள் என்பதனை வள்ளுவம் உணர்த்துகின்றது.

***எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்***
***கண்ணென்ப வாழும் உயிர்க்கு.** (குறள் 392)*

எண்ணும் எழுத்தும் மனித வாழ்க்கையின் கண்களாகக் கூறப்படுகின்றன. கண்கள் உலகின் தோற்றத்தைக் காட்டுகின்றன; கல்வி அதன் பொருளைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

***கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு***
***புண்ணுடையர் கல்லா தவர்.** (குறள் 393)*

கல்வி கற்றவரே கண்ணுடையவர். கல்லாதவர்கள் கண்ணிருந்தும் புண்ணுடையோர் எனக் கூறும் வள்ளுவம், கல்வி மனிதனுக்கு வெறும் பார்வை அல்ல; பகுத்தறியும் பார்வை என்கிறது.

### அழியாத செல்வம்

பொருட்செல்வம் அழியலாம்; கல்வி ஒருவனின் சிந்தனையிலும் ஆளுமையிலும் நிலைத்திருக்கும். அதனால் கல்வியை அழிவில்லாத செல்வமாகக் கருதுகிறார் வள்ளுவர். இச்சிந்தனையை,

*கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றை யவை. (குறள் 400)*

எனத் தெளிவுபடுத்தியுள்ளார். திருக்குறளில் கல்வி என்பது அறிவு, ஒழுக்கம், நடைமுறை ஆகியவற்றின் இணைவு. கற்றவன் அறிந்தவனாக மட்டும் இல்லாமல், கற்றதற்கேற்ப வாழ்பவனாகவும் இருக்க வேண்டும். அறிவை வாழ்க்கையாக மாற்றுவதில்தான் கல்வியின் முழுமை உள்ளது.

## 5.8. திருக்குறளில் தலைமைப் பண்புகள்

திருக்குறளின் பொருட்பாலில் அரசன், அமைச்சன், அரண், படை, குடிமக்கள், ஆலோசனை, காலமறிதல், தெரிந்து செயல்வகை போன்றவற்றைப் பற்றிய கருத்துகள் இடம்பெறுகின்றன. இக்கருத்துகளைத் தலைமைப் பண்புகளுக்கான அடிப்படைக் கோட்பாடுகளாகவும் காணலாம்.

*தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்*
*நீங்கா நிலனாள் பவற்கு. (குறள் 383)*

விழிப்புணர்வு, அறிவு, துணிவு ஆகிய மூன்றையும் ஒரு தலைவரின் அடிப்படைப் பண்புகளாக வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

### தலைமைத்துவம்

காட்சிக்கு எளியவனாகவும் அனைவரையும் நேசிப்பவனாகவும் இருக்கும் தலைவனின் தலைமையை அனைத்துமக்களும் விரும்புவர் என்பதனை,

*காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்*
*மீக்கூறும் மன்னன் நிலம். (குறள் 386)*

எனக் கூறுகின்றது வள்ளுவம். அஞ்சாமை, எளியவர்க்குக் கொடுத்து உதவும் ஈகை, அறிவு, ஊக்கம் என்னும் நான்கினையும் தலைவனுக்குரிய பண்புகளாக வரையறுத்துள்ளது திருக்குறள்.

### தலைமை நெறி

*முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*

*இறையென்று வைக்கப் படும். (குறள் 388)*

தலைவன் தன்னை நம்பியிருக்கும் மக்களுக்குத் தேவையானவற்றைச் செய்து காக்கக் கூடியவனாக இருக்கவேண்டும் என்பதே திருக்குறள் காட்டும் தலைமைநெறி. தலைமை என்பது அதிகாரத்தின் உரிமை அல்ல; பொறுப்பின் கடமை என இதன்வழி வெளிப்படுகிறது. ஒரு சிறந்த தலைவர் ஆலோசனைகளைக் கேட்கவும், குறைகளைச் சுட்டிக்காட்டுபவர்களை ஏற்றுக்கொள்ளவும் வேண்டும்.

திருக்குறளின் தலைமைச் சிந்தனையில் அறிவு, துணிவு, நீதி, ஆலோசனை, பொறுப்பு, மக்கள்நலம் ஆகியவை ஒன்றிணைகின்றன. உண்மையான தலைவர் முன்னால் நடப்பவர் மட்டும் அல்ல; அனைவரையும் முன்னேற்றுபவர்.

## 5.9. திருக்குறளில் உடல்நலம்

திருக்குறளின் மருந்து அதிகாரம் நோய் வந்தபின் சிகிச்சை பெறுவது மட்டுமல்லாமல், நோய் வராமல் காக்கும் வாழ்க்கை முறையையும் எடுத்துரைக்கிறது. குறிப்பாக உணவு ஒழுக்கத்திற்கு வள்ளுவர் அளிக்கும் முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கது.

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
*அற்றது போற்றி உணின். (குறள் 942)*

முன்னர் உண்ட உணவு செரித்த பின்னர் அளவறிந்து உண்டால் உடலுக்கு மருந்து தேவைப்படாத நிலை ஏற்படலாம் என்ற தடுப்பு நலவாழ்வு சிந்தனை இதில் வெளிப்படுகிறது.

### அளவறிந்த உணவு

*அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு*
*பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு. (குறள் 943)*

உணவின் தரம் மட்டுமல்ல, அதன் அளவும் முக்கியமானது. உடலுக்குத் தேவையான அளவை உணர்ந்து உண்பதே நலவாழ்வின் அடிப்படை.

*மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்*
*ஊறுபாடு இல்லை உயிர்க்கு. (குறள் 945)*

உடலுக்கு ஒவ்வாத உணவைத் தவிர்த்து, பொருத்தமான உணவுமுறையைப் பின்பற்ற வேண்டும் என்ற சிந்தனையும் இதில் காணப்படுகிறது.

திருக்குறளின் உடல்நலச் சிந்தனை நோய்க்குப் பின் மருந்து என்பதைவிட, நோய்க்கு முன் ஒழுங்கான வாழ்க்கை என்பதற்கு முன்னுரிமை அளிக்கிறது. உணவு, அளவு, செரிமானம், உடலின் இயல்பு ஆகியவற்றை அறிந்து வாழ்வதே நலவாழ்வின் அடிப்படை.

## 5.10. திருக்குறளில் மருத்துவ அறம்

திருக்குறளில் மருந்து என்னும் அதிகாரம் மருத்துவம், மருத்துவர் குறித்த கருத்துகளைப் பதிவுசெய்திருக்கின்றது. இதில் நோய், நோய்க்கான காரணம், நோய் தீர்ப்பதற்கான வழி, நோயாளியின் தன்மை இவற்றை அறிந்து மருத்துவர் செயல்பட வேண்டுமென எடுத்துரைக்கின்றது.

*நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல். (குறள் 948)*

முதலில் நோயை அறிய வேண்டும்; பின்னர் அதன் காரணத்தைக் கண்டறிய வேண்டும்; அதன்பின் தீர்வு என்ன என்பதை ஆராய்ந்து பொருத்தமான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். இதுவே முறையான மருத்துவ அணுகுமுறையின் தெளிவான வடிவம் என்ற சிந்தனையை முன்வைக்கின்றது இத்திருக்குறள்.

### நோயாளியை மையப்படுத்திய மருத்துவம்

*உற்றான் அளவும் பிணியளவும் காலமும்*
*கற்றான் கருதிச் செயல். (குறள் 949)*

ஒரே நோய்க்கு எல்லோருக்கும் ஒரே அணுகுமுறை பொருந்தாது. நோயாளியின் நிலை, நோயின் அளவு, காலம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மருத்துவன் செயல்பட வேண்டும் என்று குறள் விளக்கப்படுகிறது.

*உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று*
*அப்பால் நாற்கூற்றே மருந்து. (குறள் 950)*

நோயாளி, மருத்துவர், மருந்து, மருத்துவ உதவி என மருத்துவச் செயல்முறையின் பல கூறுகளையும் ஒருங்கிணைத்துப் பார்க்கிறார் வள்ளுவர்.

திருக்குறளில் மருத்துவ அறம் என்பது நோயைக் குணப்படுத்துதல் மட்டுமல்ல; நோயாளியைப் புரிந்துகொண்டு, அறிவுடன், ஆராய்ச்சியுடன், பொறுப்புடன் செயல்படுதல். நோயை அல்ல, நோயாளியையும் கவனத்தில் கொள்ளும் மருத்துவப் பார்வையே இதன் சிறப்பு.

## 5.11. திருக்குறளில் மனநலம்

திருக்குறளில் ‘மனநலம்’ எனும் அதிகாரத்தை நேரடியாகக் காண இயலாது. இருப்பினும் கவலை, சினம், பொறாமை, பேராசை, துன்பம், மனத்திண்மை, நட்பு, அன்பு, அடக்கம் ஆகியவற்றைப் பற்றிய குறள்கள் மன அமைதிக்கு உதவும் வாழ்வியல் கூறுகளை வழங்குகின்றன.

*அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம். (குறள் 35)*

பொறாமை, அளவற்ற ஆசை, சினம், துன்புறுத்தும் சொல் ஆகியவற்றிலிருந்து விலகுதல் அறமாகக் கூறப்படுகிறது. இவை தனிமனித உறவுகளை மட்டுமல்லாமல் மன அமைதியையும் பாதிக்கும் கூறுகளாக உள்ளன.

## துன்பத்தை எதிர்கொள்ளும் மனவலிமை

துன்பத்தில் துவளுவதே மனித இயல்பு. இது மன அமைதியின்மைக்கு வழிகோலும். அந்நிலையில் மனநலம் குன்றும். இத்தகைய சூழலில் இருந்து ஒருவன் தன்னைத் தற்காத்துக் கொள்ள வள்ளுவர் தீர்வு ஒன்றினைச் சுட்டுகின்றார். அதாவது, துன்பம் வரும்போது ஒருவன் அதனை மகிழ்வோடு ஏற்றுக்கொள்வாயின் அவனது துன்பம் மனத்தினைப் பாதிக்காது. இக்கருத்தினை,

*இடுக்கண் வருங்கால் நகுக அதனை*
*அடுத்தூர்வது அஃதொப்பது இல். (குறள் 621)*

என்னும் குறள் முன்வைக்கின்றது. இதனைத் துன்பத்தை மறுக்க வேண்டும் என்று பொருள் கொள்ளாமல், இடரால் முழுமையாகச் சிதைந்து விடாமல் எதிர்கொள்ளும் மனத்திட்பத்தினைப் பெறவேண்டும் என்று புரிந்துகொள்ளலாம்.

மனநலத்திற்கு நல்ல மனித உறவுகளும் அவசியம். அன்பு, நட்பு, இனிய சொல், நன்றியுணர்வு போன்றவற்றுக்கு வள்ளுவர் அளிக்கும் முக்கியத்துவம் மனிதனின் உளவாழ்வுக்கும் சமூக உறவுக்கும் தொடர்புடையது.

## மனநலம் பேணும் வழிகள்

பிறர் வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொள்ளுதல் மனநலத்தினைச் சீரழிக்கும். பிறர் வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்படாமல் பாராட்டி மகிழ்ந்து, தாமும் இத்தகைய உயர்வினைப் பெறுவோம்; பெற இயலும் எனக் கருதிச் செயல்படுவது மனநலத்தைப் பேணிகாக்க உதவும். இக்கருத்தினை,

*அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்*
*பேணாது அழுக்கறுப் பான். (குறள் 163)*

திருக்குறள் மன அமைதியை வெளியில் தேடுவதற்கு முன் மனத்தைச் செம்மைப்படுத்தச் சொல்கிறது. உணர்ச்சிகளை அறிதல், அவற்றை நெறிப்படுத்துதல், துன்பத்தில் தளராதிருத்தல், அன்பான உறவுகளை வளர்த்தல் ஆகியவை அதன் வாழ்வியல் செய்திகளாக அமைகின்றன.

## 5.12. திருக்குறளில் மனிதநேயம்

மனிதனை மனிதனாக மதித்தல், பிறர் துன்பத்தை உணர்தல், உதவி செய்தல், தீங்கு செய்யாமை, பசியைப் போக்குதல், அன்புடன் நடத்துதல் ஆகியவை மனிதநேயத்தின் அடிப்படைகள். திருக்குறள் முழுவதும் இச்சிந்தனைப் பல்வேறு வடிவங்களில் விரவியுள்ளது.

*அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு. (குறள் 72)*

தன்னலத்தைத் தாண்டிப் பிறரை நோக்கி விரியும் மனமே மனிதநேயத்தின் தொடக்கம்.

### பிறர் துன்பத்தைத் தன் துன்பமாக உணர்தல்

*அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்*
*தம்நோய்போல் போற்றாக் கடை. (குறள் 315)*

பிறரின் துன்பத்தைத் தன் துன்பம்போல் உணராத அறிவால் என்ன பயன் என்ற கேள்வி மனிதநேயத்தின் மகத்துவத்தைத் தொடுகிறது. அறிவின் உயர்வு அதன் அளவில் இல்லை; அது பிறருக்குப் பயன்படும் வகையில் உள்ளது.

### ஈகையும் மனிதநேயமும்

உதவி உண்மையில் தேவைப்படுபவருக்குச் செய்யப்படும்போதுதான் அது ஈகையாகிறது. இதனை,

*வறியார்க்கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்*
*குறியெதிர்ப்பை நீரது உடைத்து. (குறள் 221)*

எனும் குறள் விளக்குகிறது. எதிர்பார்ப்பின்றிச் செய்யப்படும் உதவி மனிதநேயத்தின் உயர்ந்த வடிவம் ஆகும்.

திருக்குறளில் மனிதநேயம் ‘தான்’ என்பதிலிருந்து “தாம்” என்பதற்குச் செல்லும் மனப்பயணம். பிறரின் துயரை உணர்ந்து, அவர்களின் நலனுக்காகச் செயல்படும் போதுதான் அறிவும் செல்வமும் மனித மதிப்பைப் பெறுகின்றன.

## 5.13. திருக்குறளில் சமூக நல்லிணக்கம்

ஒரு சமூகம் சட்டங்களால் மட்டும் நிலைத்திருக்காது. ஒருவரையொருவர் மதித்தல், அன்பு, நீதி, பொறுமை, இனிய சொல், விட்டுக்கொடுத்தல் ஆகிய பண்புகளே சமூக நல்லிணக்கத்தின் அடித்தளங்கள்.

*இனிய உளவாக இன்னாத கூறல்*
*கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (குறள் 100)*

இனிமையான சொற்களைப் பேசாமல் கடுமையான சொற்களால் பேசுவது கனியை விட்டுவிட்டுக் காயைத் தேர்ந்தெடுப்பதைப் போன்றது. உறவுகளைப் பேணுவதில் சொற்கள் பெரும்பங்காற்றுகின்றன. ஆதலின், சமூக உறவுகளில் மொழியின் பொறுப்பை இக்குறள் உணர்த்துகிறது.

**தீமைக்கு நன்மை**

பழிக்குப் பழி என்ற சுழற்சியைத் தொடராமல், தீமைக்கு நன்மையால் பதிலளிப்பதே உயர்ந்த பண்பு என வள்ளுவர் கூறுகிறார். இது சமூக நல்லிணக்கத்தின் ஆழமான அறவியல் அணுகுமுறையாகும். இதனை விளக்கும் வகையில்,

*இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண*
*நன்னயம் செய்து விடல். (குறள் 314)*

எனும் திருக்குறள் அமைகின்றது.

**நடுவுநிலை**

சமூக நல்லிணக்கத்திற்கு நீதி முதன்மையானது. ஒருபக்கச் சார்பின்றி அனைவரையும் சமமாக அணுகும் நடுவுநிலைமை இல்லாமல் நீடித்த ஒற்றுமை உருவாகாது. எனவே திருக்குறளின் நல்லிணக்கம் வேறுபாடுகளை அழிப்பதல்ல; வேறுபாடுகளுக்கு இடையிலும் மனித நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதாகும்.

அன்பு, இனிய சொல், பொறுமை, நீதி, மன்னிப்பு ஆகியவை திருக்குறள் காட்டும் சமூக நல்லிணக்கத்தின் தூண்கள். ஒற்றுமை என்பது அனைவரும் ஒரேபோல் இருப்பது அல்ல; வேறுபட்டவர்களும் மரியாதையுடன் ஒன்றிணைந்து வாழ்வதாகும்.

## 5.14. திருக்குறளில் நட்பு

திருக்குறளில் நட்பு வெறும் பொழுதுபோக்கு உறவாகக் கருதப்படவில்லை. நல்ல நண்பரைத் தேர்ந்தெடுத்தல், நட்பைச் சோதித்தறிதல், உண்மையான நட்பைப் பேணுதல், தீய நட்பைத் தவிர்த்தல் என நட்பின் பல பரிமாணங்களை வள்ளுவர் ஆராய்கிறார்.

*முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து*
*அகநக நட்பது நட்பு. (குறள் 786)*

முகம் மலர சிரிப்பது மட்டும் நட்பன்று; உள்ளத்திலிருந்து மலரும் உண்மையான அன்பே நட்பு.

### தவறைத் திருத்தும் நண்பன்

நண்பன் மகிழ்ச்சியில் உடனிருப்பவன் மட்டும் அல்ல. தவறான பாதையிலிருந்து விலக்கித் துன்பம் நேரும்போது துணைநிற்பவனே உண்மையான நண்பன் என நட்பிற்கு இலக்கணம் வகுத்துரைக்கிறார்.

*அழிவினவை நீக்கி ஆறுய்த்து அழிவின்கண்*
*அல்லல் உழப்பதாம் நட்பு. (குறள் 787)*

எனும் குறள் நட்பின் கடமையை வலியுறுத்துகிறது. துன்பத்தில் தவிக்கும் நண்பனைக் காப்பாற்றும் செயலினை வள்ளுவர் ஓர் உயரிய உவமையைக் கையாண்டு உணர்த்தியுள்ளார்.

*உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே*
*இடுக்கண் களைவதாம் நட்பு. (குறள் 788)*

ஆடை நழுவும்போது கை எவ்வாறு தன்னிச்சையாக உதவுகிறதோ, அவ்வாறே நண்பனின் துன்பத்தில் அழைப்புக்காகக் காத்திருக்காமல் உதவுவது உண்மையான நட்பு என்கிறார்.

மகிழ்ச்சியைப் பகிர்வதைவிட, தவறைத் திருத்துதல், துன்பத்தில் துணைநிற்றல், உண்மையாக இருத்தல் ஆகியவற்றில்தான் நட்பின் மதிப்பு இருக்கிறது.

## 5.15. திருக்குறளில் அரசியல்

திருக்குறளின் பொருட்பாலில் அரசு, ஆட்சியாளர், அமைச்சர், அரண், படை, குடிமக்கள், நீதி, பொருளாதாரம், தூது போன்ற அரசியல் கூறுகள் விரிவாகப் பேசப்படுகின்றன. வள்ளுவரின் அரசியல் சிந்தனையில் மக்கள் நலனும் நீதியும் முன்நிற்கின்றன.

*படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்*
*உடையான் அரசருள் ஏறு. (குறள் 381)*

படை, குடிமக்கள், பொருளாதார வளம், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறு கூறுகளையும் அரசின் முக்கிய அங்கங்களாக வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

### செங்கோன்மை

*வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்*
*கோல்நோக்கி வாழும் குடி. (குறள் 542)*

மழையை எதிர்நோக்கும் உலகைப் போல, குடிமக்களின் வாழ்க்கை அரசின் செங்கோலைச் சார்ந்துள்ளது என்ற கருத்து இதில் வெளிப்படுகிறது. அரசியல் தனிநபரின் பெருமைக்கான கருவி அல்ல; மக்களின் பாதுகாப்புக்கும் நலனுக்குமான பொறுப்பு என்பதே திருக்குறளின் அடிப்படை. திருக்குறளின் அரசியல் கோட்பாட்டில் அதிகாரத்தைவிட நீதி, ஆட்சியாளரைவிட குடிமக்களின் நலம், வலிமையைவிட பொறுப்புணர்வு ஆகியன முக்கியத்துவம் பெறுகின்றன.

## 5.16. திருக்குறளில் நிருவாகத் திறன்

நிருவாகம் என்பது முடிவெடுப்பது மட்டும் அல்ல; சரியான செயலைச், சரியான மனிதரிடம், சரியான நேரத்தில் ஒப்படைத்து, விளைவுகளை மதிப்பிட்டு நிறைவேற்றுவது ஆகும். திருக்குறளின் பல அதிகாரங்களில் இத்தகைய நிருவாகக் கூறுகள் காணப்படுகின்றன.

*இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல். (குறள் 517)*

ஒரு பணியை யார் எந்த வழியில் திறம்பட முடிப்பார் என்பதை ஆராய்ந்து அவரிடம் ஒப்படைக்க வேண்டும். இது நிருவாகத்தில் கூறப்படும் சரியான பணிக்குச் சரியான நபர் என்ற கருத்துடன் தொடர்புபடுத்தத்தக்கது.

### திட்டமிடலும் செயல்படுத்தலும்

*எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
*எண்ணுவம் என்பது இழுக்கு. (குறள் 467)*

செயலுக்கு முன் ஆராய்ச்சி வேண்டும்; முடிவெடுத்த பின் தேவையற்ற தயக்கம் இருக்கக்கூடாது. திட்டமிடல் மற்றும் செயலாக்கம் இரண்டிற்கும் இடையிலான சமநிலையை வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

வளங்கள், காலம், செயல்முறை, கடினமான பணியை நிறைவேற்றும் திறன் ஆகியவற்றை அறிந்திருப்பது சிறந்த நிர்வாகத்தின் பண்பு. இதனை

*கருவியும் காலமும் செய்கையும் செய்யும்*
*அருவினையும் மாண்டது அமைச்சு. (குறள் 631)*

என்ற குறள் உணர்த்துகிறது. குறள் கூறும் நிருவாகச் சிந்தனை திட்டமிடல், மனிதவளத் தேர்வு, காலமறிதல், பொறுப்பளித்தல், செயல்திறன் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாக அமைகிறது. சிறந்த நிர்வாகி அனைத்தையும் தானே செய்பவர் அல்ல; செயற்படுத்துபவர்.

## 5.17. திருக்குறளில் பொருளாதாரச் சிந்தனைகள்

அறநெறியில் பொருளை ஈட்டுதல், பாதுகாத்தல், முறையாகப் பயன்படுத்துதல், பிறருக்கும் பயன்படச் செய்தல் ஆகியவற்றைத் திருக்குறள் வலியுறுத்துகிறது. இதனால் பொருளாதாரம் மனிதநலனுடன் இணைக்கப்படுகிறது.

*இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்லது அரசு. (குறள் 385)*

வருவாயை உருவாக்குதல், ஈட்டுதல், பாதுகாத்தல், பின்னர் உரிய முறையில் பகிர்ந்தளித்தல் ஆகியவை நல்ல பொருளாதார நிருவாகத்தின் கூறுகளாகின்றன.

### பொருளின் சமூகப் பயன்

ஒரு நாடு பொருளாதாரத்தில் தன்னிறைவு உடையதாகத் திகழும்போது, அதுவே பகையினை இல்லாததாக்கி விடும். அத்தகைய பொருளாதார முன்னேற்றத்தை ஒரு நாடு கொண்டிருக்கவேண்டும் என்ற கருத்தினை வள்ளுவம் முன்வைக்கிறது. அச்சிந்தனையை,

*செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்*
*எஃகதனிற் கூரியது இல். (குறள் 759)*

எனும் திருக்குறள் எதிரொலிக்கிறது. பொருளாதார வலிமை தனிமனிதனுக்கும் அரசுக்கும் செயலாற்றும் திறனை வழங்குகிறது. ஆனால் பொருள், அறத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பது திருக்குறளின் விரிந்த சிந்தனை. ஈகை, ஒப்புரவு, விருந்தோம்பல் போன்ற அதிகாரங்கள் செல்வத்தின் சமூகப் பொறுப்பையும் எடுத்துரைக்கின்றன. இதனால் பொருளீட்டலின் இறுதி நோக்கம் குவித்தல் மட்டும் அல்ல; பயனுறச் செய்தலும் ஆகும்.

திருக்குறளின் பொருளாதாரச் சிந்தனை, உற்பத்தி - ஈட்டல் - பாதுகாப்பு - பகிர்வு என்ற கூறுகளை உள்ளடக்கியது. பொருள் மனிதனை ஆளக்கூடாது; மனித நலனுக்குப் பயன்பட வேண்டும். அறத்தோடு இணைந்த பொருளாதாரமே நிலையான செல்வம் என்பது வள்ளுவரின் அடிப்படைச் செய்தி.

## 5.18. திருக்குறளில் உழவு

திருவள்ளுவர் உழவை ஒரு தொழிலாக மட்டும் கருதாமல், சமூக வாழ்வின் அடித்தளமாகக் காண்கிறார். உணவு உற்பத்தி இல்லாமல் உலகம் செயற்பட இயலாது. ஆகவே, திருவள்ளுவர் உழவருக்கு உயர்ந்த இடம் அளிக்கிறார்.

*சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை. (குறள் 1031)*

உலகம் பல தொழில்களில் ஈடுபட்டிருந்தாலும் இறுதியில் உணவிற்காக உழவையே சார்ந்து நிற்கிறது.

### சமூகத்தின் ஆணிவேர்

உழவே, உலக உயிர்களின் பசிப்பிணியினைப் போக்கி, மனமகிழ்வையும், உள்ளத் தெளிவையும் அளிக்கக் கூடியது. பசிப்பிணிப் போக்கும் மருத்துவர்களாகிய உழவர்களைப் போற்றும் வகையில்,

*உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர். (குறள் 1033)*

என்னும் குறளை வள்ளுவர் தந்துள்ளார். உழைப்பின் மூலம் உணவை உருவாக்குபவர்களின் தற்சார்பையும் சமூகப் பங்களிப்பையும் இக்குறள் உயர்த்துகிறது.

*உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்*
*விட்டேமென் பார்க்கும் நிலை.(குறள் 1036)*

உழவர்களின் கை செயலிழந்தால் மற்ற துறைகளும் பாதிக்கப்படும் என்ற சமூகப் பொருளாதார உண்மையை வள்ளுவர் உணர்த்துகிறார். திருக்குறளில் உழவு உணவு உற்பத்தி மட்டுமல்ல; மனித சமூகத்தின் உயிராதாரம். உழவரை மதிப்பது ஒரு தொழிலை மதிப்பதன்று; மனித வாழ்வைத் தாங்கும் அடிப்படை உழைப்பை மதிப்பதாகும்.

## 5.19. திருக்குறளில் சுற்றுச்சூழல்

'சுற்றுச்சூழல்' குறித்த கருத்துகள் திருக்குறளில் நேரடியாக இடம்பெறாவிட்டாலும், மழை, நீர், உழவு, உயிர்நேயம், கொல்லாமை, அளவான நுகர்வு போன்ற சிந்தனைகளின் ஊடாக இயற்கைக்கும் மனித வாழ்வுக்கும் உள்ள சார்பினைத் திருக்குறள் பதிவு செய்திருக்கிறது.

### நீரின் முதன்மை

உலகில் வாழ்வியல் சுழற்சி தடையுறாமல் நடைபெறவேண்டுமானால் நீர் வளம் இன்றியமையாதது. நீர் வளத்தின் முக்கியத்துவத்தை வள்ளுவர்,

*நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்*
*வானின்று அமையாது ஒழுக்கு. (குறள் 20)*

என்ற குறளில் பதிவுசெய்துள்ளார். நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது. எனவே, நீரின் ஆதாரமான மழையின் முக்கியத்துவத்தையும் வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

*விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே*
*பசும்புல் தலைகாண்பு அரிது. (குறள் 16)*

என்ற குறளில், ஒரு சிறு பசும்புல்லின் வாழ்வுக்குக்கூட மழை அவசியம். மனிதன், தாவரம், நீர், மழை ஆகியவை தனித்தனியானவை அல்ல; அவை ஒன்றோடு ஒன்று தொடர்புடைய இயற்கைச் சங்கிலி என்பதை எடுத்துரைக்கிறார்.

### உயிர்நேயமும் சூழலியலும்

நாடு நீரின்றி வளம்குன்றின் வறுமைநிலை எய்தும். இதனால் பிணி, பசி, பகை ஆகியன மிகுந்து நாட்டின் இயல்பைக் குலைக்கும். எனவே, நீர்வளமே இவற்றைக் களையும் மிகப் பெரிய ஆதாரம். இயற்கை வளத்துடன் நாடு விளங்கும்போது பசி என்பது இல்லாமல்போகும். அனைவர்க்கும் உணவு கிடைப்பதால் உள்ளநலமும் உடல்நலமும் சிறப்பதோடு, அனைவர்க்கும் அனைத்தும் கிடைப்பதனால் பகையுணர்வும் இல்லாமல் போகும். தானமும் தவமும் கூட கைவரப் பெறும். ஆதலின் இயற்கையைப் பாதுகாப்பது நமது கடமை என்பதனை,

*தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்*
*வானம் வழங்காது எனின். (குறள் 19)*

என்ற குறளின் வாயிலாக வலியுறுத்துகிறார். திருக்குறளின் சுற்றுச்சூழல் சார்ந்த சிந்தனைகள் மனிதன் இயற்கையிலிருந்து தனித்து வாழ முடியாது என்பதை உணர்த்துகின்றன. இயற்கையைப் பாதுகாப்பது வெளிப்புற உலகைக் காப்பது மட்டும் அல்ல; மனித வாழ்வின் அடித்தளத்தையே காப்பது என்பதே வள்ளுவன் வாய்மொழி.

## 5.20. திருக்குறளில் குடும்ப அறம்

திருக்குறளில் குடும்பம் தனிப்பட்ட வாழ்விடமாக மட்டும் கருதப்படவில்லை; அறம் உருவாகும் முதல் சமூக அமைப்பாகக் கருதப்படுகிறது. அன்பு, பொறுப்பு, விருந்தோம்பல், மக்கட்பேறு, இனிய உறவு ஆகியவை குடும்ப அறத்தின் கூறுகளாக அமைகின்றன.

*அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது. (குறள் 45)*

குடும்பத்தின் பெருமை செல்வத்தில் இல்லை; அன்பும் அறமும் நிறைந்த உறவில்தான் உள்ளது.

### குடும்பத்தின் சமூகப் பொறுப்பு

தனிமனித வாழ்வு என்பது தான், தன்குடும்பம் என்று வாழ்வது அல்ல. ஒவ்வொரு தனி மனிதனும் தன்னைப் படைத்துக் காக்கும் உலகிற்குத் தன்னாலான சிறுகடமையைச் செய்யவேண்டும். பெரிய அளவில் சமூகப் பணியினைச் செய்ய இயலவில்லையாயினும், தன்னால் இயன்ற அளவு தன்னைச் சுற்றி இருக்கும் உறவுகளையும், உயிர்களையும் பாதுகாப்பது ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உரிய கடமையாகின்றது. இதனை மனதில் கொண்டு இல்வாழ்க்கையில், இல்வாழ்பவன் மேற்கொள்ள வேண்டிய செயல்களை மிகத் தெளிவாக வள்ளுவர் வரையறுக்கிறார். துறவியர்க்கும், வறுமைப்பட்டோர்க்கும், தனக்குத் தொடர்புடைய இறந்தவர்களுக்கும் துணையாய் நிற்பது இல்வாழ்க்கையின் அறம் ஆகும். குடும்ப அமைப்பில் மேற்கொள்ளப்பெறும் நெறியை வள்ளுவம்,

*இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்*
*நல்லாற்றின் நின்ற துணை. (குறள் 41)*

என்று குறிப்பிடுகிறது. இல்வாழ்க்கை தனக்காக மட்டும் வாழும் அமைப்பு அன்று; பிறருக்கும் துணையாக அமைய வேண்டிய சமூகப் பொறுப்புக் கொண்டது. இத்தகைய சமூகப் பொறுப்பிற்கு அடிப்படை நல்ல குடும்ப அமைப்பு. அதனால் வள்ளுவர், குடும்ப மேன்மைக்கு நற்பண்புடைய மனைவியும், அதன் வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்லும் நல்ல குழந்தைகளும் இன்றியமையாதவர்கள் என்பதனை,

*மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்*
*நன்கலம் நன்மக்கட் பேறு. (குறள் 60)*

என்ற குறளின் வாயிலாகத் தெளிவுபடுத்தியுள்ளார். குடும்பத்தின் சிறப்பு நல்ல குடும்பப் பண்பிலும், அடுத்த தலைமுறையை நல்வழியில் உருவாக்குவதிலும் உள்ளது.

திருக்குறளின் குடும்ப அறம் அன்பு, பொறுப்பு, பகிர்வு, நல்ல தலைமுறை உருவாக்கம் ஆகியவற்றின் இணைவாகும். நல்ல சமூகம் உருவாக வேண்டுமெனில் அதன் முதல் பள்ளியான குடும்பம் அறத்துடன் அமைய வேண்டும்.

## 5.21. திருக்குறளில் மகளிர்

திருக்குறளில் பெண்கள் பற்றிய கருத்துகளை அதன் காலச் சமூகப் பின்னணியோடு வாசிப்பது அவசியம். இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணை, மக்கட்பேறு மற்றும் இன்பத்துப்பால் ஆகிய பகுதிகளில் பெண்களின் இடம் பல்வேறு கோணங்களில் வெளிப்படுகிறது. அவற்றில் வாழ்க்கைத்துணையின் பண்பு, குடும்ப நிருவாகம், உறவின் ஆழம் போன்ற கூறுகள் முக்கியமானவை.

### இல்வாழ்வில் மகளிர்

வாழ்க்கைத்துணை குடும்பத்தின் வளத்திற்கேற்ப அதனைச் செம்மையாக நடத்தும் மாண்புடையவராகக் காட்டப்படுகிறார்.

***மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்***
***வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.*** *(குறள் 51)*

என்ற குறளின் ஊடாகக் குடும்ப அமைப்பில் அவருக்குரிய பொறுப்பும் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தியுள்ளார். மேலும் சிறந்த குடும்பத் தலைவியைப் பெறவில்லையெனில், இல்லம் சிறக்காது என்பதனை,

***மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை***
***எனைமாட்சித் தாயினும் இல்.*** *(குறள் 52)*

என்ற குறளில் பதிவுசெய்கிறார். வெளிப்புற வளங்கள் எவ்வளவு இருந்தாலும் குடும்ப வாழ்வின் உள்மாண்பு இல்லாவிட்டால் அதன் நிறைவு குறையும் என்ற கருத்து தெளிவுபடுத்தப்படுகிறது.

### காதலில் பெண்ணின் குரல்

இன்பத்துப்பாலில் தலைவியின் அன்பு, பிரிவு, ஏக்கம், ஊடல் போன்ற உளவுணர்வுகள் தனித்த குரலுடன் வெளிப்படுகின்றன. எனவே திருக்குறளில் பெண் குடும்பப் பொறுப்புடையவராக மட்டுமன்றி, ஆழமான உணர்வும் விருப்பமும் கொண்டவள் என்ற பதிவும் காட்டப்பெறுகின்றது. இப்பகுதி வாழ்க்கைத்துணையின் மாண்பு, குடும்பத்தில் அவளது முக்கியப் பங்கு, காதல் வாழ்வில் அவளது உணர்வுக் குரல் ஆகியவற்றைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

## 5.22. திருக்குறளில் மேலாண்மை

'மேலாண்மை' என்ற சொல்லாக்கம் திருக்குறளில் இல்லாவிட்டாலும், திட்டமிடல், மனிதவளத் தேர்வு, காலமறிதல், இடமறிதல், பொறுப்பளித்தல், முடிவெடுத்தல், கண்காணித்தல் போன்ற மேலாண்மைக் கூறுகளைப் பொருட்பாலில் பரவலாகக் காணலாம். எந்தச் செயலையும் செய்வதற்குமுன் திட்டமிடல் அவசியம். ஆனால் முடிவு எடுத்தபின் கொள்ளும் தயக்கம் செயல்திறனைப் பாதிக்கும். இந்தச் சிந்தனையை,

*எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
*எண்ணுவம் என்பது இழுக்கு. (குறள் 467)*

என்னும் குறள் பதிவுசெய்கிறது.

### மனிதவள மேலாண்மை

உரிய நபரைத் தேர்ந்தெடுத்து அவரிடத்தில் பணியினை ஒப்படைத்து, உரிய காலத்திற்குள் அப்பணியினை நிறைவேற்ற வேண்டும் என்பதில் பெரும்பங்கு வகிப்பது மனிதவளம். அந்த வளத்தைத் திறமையாகப் பயன்கொள்வது வெற்றிக்கு வழிகோலும். இத்தகைய சிந்தனை மேலாண்மை நிருவாகத்தில் சிறந்ததாகப் பார்க்கப்பெறுகிறது. இத்தகைய சிந்தனைகளைத் திருக்குறளும் ஆங்காங்கே பதிவு செய்திருக்கிறது. அவற்றுள் ஒன்று இக்குறள்:

*இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல். (குறள் 517)*

பணியின் தன்மை, அதை நிறைவேற்றும் வழி, அதைச் செய்யும் நபரின் திறன் ஆகியவற்றை மதிப்பிட்ட பின்னரே பொறுப்பு வழங்க வேண்டும். இது திறன் அடிப்படையிலான பணிப்பகிர்வின் சிறந்த கோட்பாடு.

### காலமும் செயலாக்கமும்

காலமும் இடமும் ஒரு செயலின் வெற்றியில் பெரும்பங்காற்றும். எனவே, செயலாற்றும்போது இக்கூறுகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்பதனை,

*ஞாலம் கருதினும் கைகூடும் காலம்*
*கருதி இடத்தால் செயின். (குறள் 484)*

என்ற குறள் எடுத்துரைக்கிறது. பெரிய இலக்குகளைக்கூட சரியான காலத்தையும் சூழலையும் அறிந்து செயல்பட்டால் நிறைவேறலாம். எனவே மேலாண்மையில் வளங்கள் மட்டுமல்ல; காலமும் சூழலும் வளங்களே. திருக்குறளின் மேலாண்மைச் சிந்தனை என்பது திட்டமிடுதல் - ஆராய்தல் - தகுதியானவரைத் தேர்ந்தெடுத்தல் - காலமறிந்து செய்தல் - உறுதியுடன் நிறைவேற்றுதல்.

நல்ல மேலாண்மை என்பது அதிகமான பணிகளைச் செய்வதல்ல; உரிய பணியை உரிய முறையில் உரிய நேரத்தில் நிறைவேற்றுவது.

## 5.23. உலக மொழிகளில் திருக்குறள்

திருக்குறள் தமிழில் தோன்றியிருந்தாலும் அதன் மையச் சிந்தனைகள் மனித வாழ்க்கையின் பொதுவான கேள்விகளைத் தொடுகின்றன. அறம், அன்பு, நீதி, நட்பு, ஆட்சி, கல்வி, உழைப்பு, குடும்பம், காதல் போன்றவை உலகமக்கள் அனைவருக்கும் பொதுவானவை. எனவே, திருக்குறள் உலகப் பொதுமறை என்று போற்றப்பெறுகின்றது. திருக்குறளைப் பல்வேறு மொழியினரும் தங்கள் மொழிகளில் மொழிபெயர்த்தற்கு அடிப்படைக் காரணம் பொதுமைக் கருத்துகளை உள்ளடக்கி நிற்பதேயாகும்.

கல்வி மனிதனை நாடு, ஊர் போன்ற எல்லைகளைக் கடந்து செல்லச் செய்கிறது. அதுபோலவே திருக்குறளும் மொழிபெயர்ப்புகளின் வழியாகத் தனது மூலமொழியைத் தாண்டிப் பல்வேறு நாட்டினரையும் சென்றடைந்துள்ளது.

திருக்குறளை மொழிபெயர்ப்பது சொற்களை மட்டும் மாற்றுவது அல்ல. இரண்டு அடிகளில் அமைந்த குறளின் செறிவு, உவமை, இலக்கண அமைப்பு, பண்பாட்டு நுணுக்கம் ஆகியவற்றை மற்றொரு மொழியில் எடுத்துச் செல்வது பெரிய சவால். எனவே ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் மூலத்திற்கும் புதிய மொழிச் சூழலுக்கும் இடையே அமைக்கப்படும் பண்பாட்டுப் பாலம்.

திருக்குறளின் உலகளாவிய பொருத்தம் அதன் மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கையால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. மனித வாழ்க்கையின் அடிப்படைக் கேள்விகளை மிகச் சுருக்கமாக எடுத்துரைக்கும் தன்மையே அதன் பரந்த வாசிப்புக்கான முக்கிய காரணம்.

“எப்படி நல்ல மனிதனாக வாழ்வது?”, “அதிகாரத்தை எவ்வாறு பயன்படுத்துவது?”, “செல்வத்தின் பயன் என்ன?”, “நட்பு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்?”, “பிறருக்குத் தீங்கு செய்யாமல் எவ்வாறு வாழ்வது?” போன்ற கேள்விகள் காலத்தையும் மொழியையும் கடந்து உலகமக்கள் அனைவருக்கும் பொதுவாய் நிற்பவை.

திருக்குறள் இந்திய மொழிகள், ஐரோப்பிய மொழிகள், தென்கிழக்காசிய மொழிகள் எனப் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பெற்றிருப்பது ‘திருக்குறள்’ உலகப் பொதுமறை என்பதற்குச் சான்று. இதனால் திருக்குறள் மொழிபெயர்ப்புகள் தமிழுக்கும் பிற மொழிப் பண்பாடுகளுக்கும் இடையிலான அறிவு மற்றும் பண்பாட்டுப் பரிமாற்றம்.

திருக்குறள் தமிழின் செல்வமாகத் தோன்றி, மொழிபெயர்ப்புகளின் வழியாகப் பரந்த மனித சமூகத்துடன் உரையாடும் நூலாக வளர்ந்துள்ளது. அதன் உலகப் பயணத்தின் வலிமை அதன் குறுகிய வடிவத்தில் இல்லை; அந்தக் குறுகிய வடிவத்திற்குள் அடங்கிய பரந்த மனிதச் சிந்தனையில் உள்ளது. மொழிகள் மாறினாலும் அன்பு, அறம், நீதி, மனிதநேயம் ஆகியவற்றின் தேவை மாறுவதில்லை. அந்தப்

பொதுமனிதத் தன்மையே திருக்குறளை மொழி எல்லைகளைக் கடந்து தொடர்ந்து பயணிக்கச் செய்கிறது.

வான்மறை வள்ளுவம் என்னும் இந்த இயலில், உலகப் பொதுமறை திருக்குறள் பேசும் பொருண்மைகள் குறித்து அறிந்து கொண்டோம். அடுத்தப் பகுதியில், குறள் மணிமாலை வழித் திருக்குறளைப் பயில்வோம்.

## இயல் 6 - குறள் மணிமாலை

திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் ஆகியவற்றிலிருந்து அதிகாரத்திற்கு ஒரு குறள் எனக் குறள்களைத் தொகுத்து, இந்தக் குறள் மணிமாலை அமைக்கப்பெற்றுள்ளது. நாளுக்கு ஒரு குறள் எனப் பயின்றால் முப்பாலையும் முழுமையாகக் கற்றுவிடலாம்.

### 1. கடவுள் வாழ்த்து

*அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு. (குறள் 1)*

எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையன; அதுபோன்று உலகம் முழுமுதற் கடவுளை முதலாக உடையது.

### 2. வான்சிறப்பு

*வான்நின்று உலகம் வழங்கி வருதலால்*
*தான்அமிழ்தம் என்றுணரல் பாற்று. (குறள் 11)*

மழை இடையறாது பெய்ய, உலகம் நிலைபெற்றிருத்தலால், அம்மழையே உலகிற்கு அமிழ்தம் என்று கருதற்குரியது.

### 3. நீத்தார் பெருமை

*அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்*
*செந்தண்மை பூண்டொழுக லான். (குறள் 30)*

எல்லாவுயிர்களிடத்தும் அன்பும் அருளும் பூண்டு ஒழுகுதலால் அந்தணர் என்று சொல்லப்படுபவர் துறவியராவர்.

### 4. அறன் வலியுறுத்தல்

*அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது*
*பொன்றுங்கால் பொன்றாத் துணை. (குறள் 36)*

நாம் இப்போது இளையவராக இருத்தலால் முதுமைவந்து இறக்கும் தறுவாயில் அறத்தினைச் செய்துகொள்ளலாம் என்று எண்ணாது, நாள்தோறும் அறம் செய்தல் வேண்டும்; அவ்வாறு செய்யும் அறம் உடலிலிருந்து உயிர் போகுங்காலத்தில் அழிவில்லாத துணையாகும்.

### 5. இல்வாழ்க்கை

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும். (குறள் 50)*

இல்லறத்தை அதற்குரிய சிறப்போடு மேற்கொண்டு உலகில் வாழ்பவன், நிலவுலகில் உள்ளவனானாலும் விண்ணில் உறையும் தெய்வத்துள் ஒருவனாக வைத்து உயர்வாக எண்ணப்படுவான்.

### 6. வாழ்க்கைத் துணைநலம்

*மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்*
*நன்கலம் நன்மக்கட் பேறு. (குறள் 60)*

மனையாளது மாட்சிமையானது ஒருவனுக்கு நன்மையென்று அறிந்தோர் சொல்லுவர்; நல்ல மக்களைப் பெறுதல் அவர்களுக்கு நல்ல அணிகலமாகும்.

### 7. மக்கட்பேறு

*குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்*
*மழலைச்சொல் கேளா தவர். (குறள் 66)*

தம் மக்களுடைய மழலைச் சொற்களைக் கேளாதவர்கள் குழலிசையினிது, யாழிசையினிது என்று சொல்லுவர்.

### 8. அன்புடைமை

*அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு. (குறள் 72)*

உள்ளத்தில் அன்பு இல்லாதவர் எல்லாப் பொருள்களையும் தமக்கே உரியனவாகக் கொள்வர்; அன்புடையவரோ அவருடைய பொருள்கள் யாவற்றோடும் தம் உடம்பினையும் பிறர்க்கு உரியனவாக ஆக்குவர்.

### 9. விருந்தோம்பல்

*மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து*
*நோக்கக் குழையும் விருந்து. (குறள் 90)*

அனிச்சப்பூவானது நுகர்ந்தபொழுது வாடும். விருந்தினர், உபசரிப்பார் முகம் வேறுபட்டு நோக்க வருந்துவர்.

### 10. இனியவை கூறல்

*இனிய உளவாக இன்னாத கூறல்*
*கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. (குறள் 100)*

இனிய சொற்கள் தன்னிடமிருக்க அவற்றைப் பேசாது, இனிமையற்ற சொற்களைப் பேசுதல், இனிய கனிகள் தன்னிடம் இருக்கும்போது அவற்றை உண்ணாமல், இனிமையற்ற காய்களை உண்ணுவது போலாகும்.

### 11. செய்ந்நன்றியறிதல்

*செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்*
*வானகமும் ஆற்றல் அரிது. (குறள் 101)*

தனக்குப் பிறர் உதவி செய்யாதபோதும் ஒருவன் மற்றவர்க்குச் செய்யும் உதவிக்கு, மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும், அவை அவ்வுதவிக்கு ஈடாகமாட்டா.

### 12. நடுவு நிலைமை

*வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்*
*பிறவும் தமபோல் செயின். (குறள் 120)*

பிறர் பொருளையும் தம்பொருள்போலக் கருதிச் செய்தால், அதுவே வாணிகம் செய்வார்க்கு நல்ல முறையாம்.

### 13. அடக்கம் உடைமை

*தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினாற் சுட்ட வடு. (குறள் 129)*

ஒருவனைத் தீயினால் சுட்டபுண் உடலில் இருப்பினும் உள்ளத்தில் அப்பொழுதே ஆறிவிடும்; ஆனால், கடுஞ்சொற்களால் நாவினால் சுட்ட வடு எப்போதும் ஆறாது.

### 14. ஒழுக்கம் உடைமை

*ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும். (குறள் 131)*

ஒழுக்கம் யாவர்க்கும் சிறப்பினைத் தருதலால், அது உயிரினும் மேலாகப் பாதுகாக்கப்படும்.

### 15. பிறனில் விழையாமை

*பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு*
*அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு. (குறள் 148)*

பிறன் மனையாளை விரும்பி நோக்காத ஆண்தகைமை சான்றோர்க்கு அறம் மட்டுமன்றி நிறைந்த ஒழுக்கமும் ஆகும்.

## 16. பொறையுடைமை

*பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை*
*மறத்தல் அதனினும் நன்று. (குறள் 152)*

பிறர்செய்த மிகையான தீமையைப் பழிதீர்க்கமுடிந்த காலத்தும் பொறுத்தல் வேண்டும். அத்தீமையை உள்ளத்தில் கொள்ளாது மறந்துவிடல் பொறுத்தலினும் நன்றாம்.

## 17. அழுக்காறாமை

*ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து*
*அழுக்காறு இலாத இயல்பு. (குறள் 161)*

ஒருவன் தன் நெஞ்சத்தில் பொறாமை என்னும் குற்றமில்லாத இயல்பைத் தனக்குரிய ஒழுக்க நெறியாகக் கொள்க.

## 18. வெஃகாமை

*அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை*
*வேண்டும் பிறன்கைப் பொருள். (குறள் 178)*

செல்வம் சுருங்காமைக்குக் காரணம் எதுவென்று ஒருவன் ஆராய்வானேயானால், அது மற்றவன் வேண்டும் கைப்பொருளைத் தான் விரும்பாமையாம்.

## 19. புறங்கூறாமை

*ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்*
*தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. (குறள் 190)*

பிறரைப் புறங்கூறுவார், அவர் குற்றத்தைப்போலத் தம் குற்றத்தையும் காண வல்லவரானால் அவர்களுடைய நிலையான உயிர்க்கு வரும் துன்பமும் உண்டோ?

## 20. பயனில சொல்லாமை

*சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க*
*சொல்லிற் பயனிலாச் சொல். (குறள் 200)*

சொற்களில் பயனுடைய சொற்களையே சொல்லவேண்டும். சொற்களில் பயனற்ற சொற்களைச் சொல்லக்கூடாது.

## 21. தீவினையச்சம்

*தீயவை தீய பயத்தலால் தீயவை*
*தீயினும் அஞ்சப் படும். (குறள் 202)*

தனக்கு இன்பம் தருதலைக் கருதிச் செய்யும் தீவினைகள் பின்னர்த் துன்பமே தருதலால், ஒருவனால் அவை தீயினும் அஞ்சப்படும்.

## 22. ஒப்புரவறிதல்

*கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு*
*என்னாற்றும் கொல்லோ உலகு. (குறள் 211)*

தமக்கு நீர் அளிக்கும் மழைக்கு உயிர்கள் என்ன கைம்மாறு செய்கின்றன? ஏதும் செய்வதில்லை. அம்மழை போன்றார் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு கருதுவன அல்ல.23. ஈகை

*அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்*
*பெற்றான் பொருள்வைப் புழி. (குறள் 226)*

வறியவரது கடும்பசியைத் தீர்த்தல் அறமாகும். பொருள் உடையான் ஒருவன் அதனைத் தனக்கு உதவவைக்கும் இடம் அவ்வறமேயாகும்.

## 24. புகழ்

*ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது*
*ஊதியம் இல்லை உயிர்க்கு. (குறள் 231)*

வறியவர்க்கு ஈதலைச் செய்க; அதனால் பெறும் புகழுடன் வாழ்க; அப்புகழைத்தவிர மக்கள் உயிர்க்குப் பயன் வேறொன்றும் இல்லை.

## 25. அருளுடைமை

*அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்*
*பூரியார் கண்ணும் உள. (குறள் 241)*

செல்வங்கள் யாவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட செல்வம் அருளாகிய செல்வமே; பொருளால் வரும் செல்வங்கள் யாவும் இழிந்தாரிடமும் இருப்பவை.

## 26. புலால் மறுத்தல்

*கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*எல்லா உயிரும் தொழும். (குறள் 260)*

எவ்வுயிரையும் கொல்லாமல், புலாலையும் உண்ணாமல் வாழ்பவனை எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும்.

## 27. தவம்

*உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை*
*அற்றே தவத்திற்கு உரு. (குறள் 261)*

தமக்கு வரும் துன்பங்களைப் பொறுத்தலும், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையுமாகிய அளவினதே தவத்தின் வடிவம்.

## 28. கூடா ஒழுக்கம்

*வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்*

*புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. (குறள் 273)*

மனத்தை அடக்கியாளும் ஆற்றல் இல்லாதவன், ஆற்றலுடையாரின் வேடத்தைக் கொள்ளுதல், பசு புலியின் தோலைப் போர்த்திக்கொண்டு, தனக்குரிய புல்லைவிட்டுப் பிறர்க்குரிய பைங்கூழை மேய்ந்தாற்போன்றது.

## 29. கள்ளாமை

*எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்*
*கள்ளாமை காக்கதன் நெஞ்சு. (குறள் 281)*

உயர்ந்தோரால் இகழப்படுதலை வேண்டாதவன், பிறர் பொருள் எதுவாயினும் அதனை வஞ்சித்துக்கொள்ள எண்ணாத வகையில் தன் நெஞ்சத்தைக் காத்துக்கொள்ள வேண்டும்.

## 30. வாய்மை

*வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*
*தீமை இலாத சொலல். (குறள் 291)*

வாய்மையென்று சொல்லப்படுவது எதுவென்றால், அது பிறவுயிர்களுக்குத் தீங்கு சிறிதும் செய்யாத சொற்களைச் சொல்லுதல்.

## 31. வெகுளாமை

*தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்*
*தன்னையே கொல்லும் சினம். (குறள் 305)*

தனக்குத் துன்பம் வராமல் தன்னைக் காத்துக்கொள்ள விரும்புகின்றவன் சினம் வராமல் பார்த்துக்கொள்ளவேண்டும்; அவ்வாறு காக்கவில்லையானால், அச்சினம் அவனையே கெடுக்கும் துன்பங்களைத் தரும்.

## 32. இன்னா செய்யாமை

*இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண*
*நன்னயம் செய்து விடல். (குறள் 314)*

தமக்குத் தீங்கு இழைத்தவரைத் தண்டித்தலாவது, அவர்களே வெட்கம் அடையுமாறு அவர்களுக்கு இனியவற்றைச் செய்து, அவர் செய்ததையும் தாம் செய்ததையும் மறந்து விடுதலாகும்.

## 33. கொல்லாமை

*பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. (குறள் 322)*

தான் உண்பதைப் பலவுயிர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து அவற்றைக் காத்தல், அறநூலார் தொகுத்துக் கொடுத்துள்ள அறங்கள் எல்லாவற்றிலும் தலையாய அறமாகும்.

### 34. நிலையாமை

*நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை உடைத்துஇவ் வுலகு. (குறள் 336)*

ஒருவன் நேற்று உயிருடன் இருந்தான்; இன்று உயிரற்றவன் ஆனான் என்று சொல்லும் நிலையாமையை மிகுதியாக உடையது இவ்வுலகம்.

### 35. துறவு

*பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு. (குறள் 350)*

பற்றற்ற இறைவனைச் சேரும் நெறியே நன்னெறியென்று உள்ளத்துள் கொள்க; விடாது தொடரும் பற்றை விடுதற்கு அப்பற்றைப் பற்றிக்கொள்ளுதல் நன்று.

### 36. மெய்யுணர்தல்

*எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு. (குறள் 355)*

எந்தவொரு பொருளும் எத்தன்மையுடையதாகத் தோன்றினாலும் அப்பொருளிலிருந்து மெய்யான பொருளைக் காண்பதே அறிவின் செயலாகும்.

### 37. அவா அறுத்தல்

*அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்*
*தவாஅப் பிறப்பீனும் வித்து. (குறள் 361)*

அவா என்பது எல்லா உயிர்களுக்கும் எக்காலத்தும் அழியாது வருகின்ற பிறப்பினை விளைவிக்கும் விதை என்று நூலோர் கூறுவர்.

### 38. ஊழ்

*ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று*
*சூழினுந் தான்முந் துறும். (குறள் 380)*

ஊழினை விலக்குதற்கு ஒருவன் ஏதாவதொரு வழியைக் கருதினாலும் அவ்வழியாகவே வந்து முற்பட்டு நிற்கும் ஊழைக்காட்டினும் வலியுடையது ஏதும் இல்லை.

பொருட்பால்

### 39. இறைமாட்சி

*முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறையென்று வைக்கப் படும். (குறள் 388)*

முறை செய்து மக்கள் துன்புறாமல் காப்பாற்றும் மன்னன் பிறப்பால் மனிதனாயினும் செயலால் கடவுளென்று கருதப்படுவான்.

## 40. கல்வி

*கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக. (குறள் 391)*

கற்கப்படும் நூல்களை ஒருவன் பழுதில்லாமல் கற்க வேண்டும்; அவ்வாறு கற்றதால் அக்கல்விக்கேற்ப, அந்நூல்கள் சொல்லுகின்ற நெறியில் நடத்தல் வேண்டும்.

## 41. கல்லாமை

*விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
*கற்றாரோடு ஏனை யவர். (குறள் 410)*

மேலான நூல்களைக் கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் உள்ள ஏற்றத்தாழ்வு மக்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வை ஒத்ததாகும்.

## 42. கேள்வி

*செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்*
*செல்வத்துள் எல்லாம் தலை. (குறள் 411)*

செவியால் வரும் செல்வமே ஒருவனுக்குச் சிறப்புடைய செல்வமாகும்; அச்செல்வம் பிற செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையாயது.

## 43. அறிவுடைமை

*எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு. (குறள் 423)*

எப்பொருளை யார் சொல்லக்கேட்டாலும் அப்பொருளின் உண்மையான பயனைக் காணவல்லது அறிவாகும்.

## 44. குற்றங்கடிதல்

*தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்*
*என்குற்றம் ஆகும் இறைக்கு. (குறள் 436)*

தன்குற்றத்தைக் கண்டு அதனை நீக்கிப் பின்னர்ப் பிறர் குற்றம்காண வல்லவனானால் அரசனுக்கு ஆகும் குற்றம் ஏதுமில்லை.

## 45. பெரியாரைத் துணைக்கோடல்

*இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்*
*கெடுப்பார் இலானும் கெடும். (குறள் 448)*

இடித்துரைத்துக் கண்டிக்க வல்லாரைத் துணையாகப் பெறாமையால் பாதுகாவலற்ற அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவர் இல்லையாயினும் தானே கெடுவான்.

## 46. சிற்றினம் சேராமை

*நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு*
*இனத்தியல்ப தாகும் அறிவு. (குறள் 452)*

தான் சேர்ந்த நிலத்தின் தன்மையால் நீரானது தனது தன்மை திரிந்து அது சேர்ந்த நிலத்தின் தன்மையதாகும்; அதுபோல, மாந்தர்க்குத் தாம் சேர்ந்த இனத்தின் தன்மையால், அறிவு தன் தன்மை இழந்து, அவ்வினத்தின் தன்மையதாகும்.

## 47. தெரிந்து செயல்வகை

*எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
*எண்ணுவம் என்பது இழுக்கு. (குறள் 467)*

செய்யத்தக்க செயலை முடிக்கும் வழியை எண்ணிப்பார்த்துத் தொடங்கல் வேண்டும்; பின்னர் எண்ணிப்பார்த்துக்கொள்ளலாம் என்று தொடங்குவது குற்றமாகும்.

## 48. வலியறிதல்

*வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்*
*துணைவலியும் தூக்கிச் செயல். (குறள் 471)*

தான் செய்ய எண்ணிய வினையின் வலியையும், தன் வலியையும், பகைவனின் வலியையும், இருவர்க்கும் துணையாவார் வலியையும் சீர்தூக்கிப்பார்த்துத் தன் வலி பகைவனின் வலியைவிடவும் மிகுமாயின், அவ்வினையை மேற்கொள்ளலாம்.

## 49. காலமறிதல்

*கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்*
*குத்தொக்க சீர்த்த இடத்து. (குறள் 490)*

ஒரு செயலைச் செய்யும் காலம் வரும்வரையிலும் ஒருவன் கொக்கினைப் போல் காத்திருத்தல் வேண்டும். உரிய காலம் வந்தவுடன் கொக்கு மீனைக் குத்துவதுபோலத் தன் செயலைத் தப்பாமல் முடித்தல் வேண்டும்.

## 50. இடனறிதல்

*நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்*
*நீங்கின் அதனைப் பிற. (குறள் 495)*

முதலை ஆழமுடைய நீரில் இருக்கும்போது பிறவற்றையெல்லாம் வெல்லும்; அந்நீரிலிருந்து நீங்குமானால் அதனைப் பிறவெல்லாம் வெல்லும்.

## 51. தெரிந்து தெளிதல்

*குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்*
*மிகைநாடி மிக்க கொளல். (குறள் 504)*

ஒருவனது குணங்களை ஆராய்ந்து, குற்றங்களை ஆராய்ந்து, குணம்மிக்கவனாயின் பணிக்கு ஏற்றவனென்றும் குற்றம்மிக்கவனாயின் பணிக்குத் தகுதியுடையவன் அல்லனென்றும் முடிவுசெய்தல் வேண்டும்.

## 52. தெரிந்து வினையாடல்

*இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல். (குறள் 517)*

இச்செயலை இக்கருவியால் இவன் முடிக்க வல்லவன் என்று ஆராய்ந்து, அச்செயலை அவனிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

## 53. சுற்றந் தழால்

*காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்*
*அன்னநீ ரார்க்கே உள. (குறள் 527)*

காக்கைகள் தமக்குரிய உணவைக் கண்டபோது மறையாது, தம் இனத்தை அழைத்து அதனோடும் கூட உண்ணும்; அத்தகைய இயல்பினை உடையவர்களுக்கே சுற்றத்தாரோடு அடையும் ஆக்கங்களும் உளவாகும்.

## 54. பொச்சாவாமை

*முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை*
*பின்னூறு இரங்கி விடும். (குறள் 535)*

தனக்கு வரவிருக்கும் துன்பங்களை முன்னமே அறிந்து தன்னைக் காத்துக்கொள்ளாது மறந்திருப்பான், பின்னர் அத்துன்பங்கள் வரும்போது தன் பிழையை எண்ணி வருந்த நேரிடும்.

## 55. செங்கோன்மை

*வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்*
*கோல்நோக்கி வாழும் குடி. (குறள் 542)*

உலகத்து உயிர்களெல்லாம் உணவுதரும் மழையை எதிர்நோக்கி வாழும்; குடிகளெல்லாம் அரசனது செங்கோலை எதிர்நோக்கி வாழும்.

## 56. கொடுங்கோன்மை

*அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே*
*செல்வத்தைத் தேய்க்கும் படை. (குறள் 555)*

அரசனது தீச்செயலால் குடிகள் துன்பமுற்று, அதனைப் பொறுக்கமாட்டாமல் அழுத கண்ணீர் அவனது செல்வத்தைக் கடிதில் அழிக்கும் கருவியாகும்.

## 57. வெருவந்த செய்யாமை

*தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்*
*ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து. (குறள் 561)*

ஒருவன் தன்னினும் மெலியாரைத் துன்புறுத்தும்போது, அதனை நடுவுநிலையில் நின்று ஆராய்ந்து மேலும் அவன் அதனைச் செய்யாது, அவனது குற்றத்திற்கேற்பத் தண்டிப்பவனே அரசனாவான்.

### 58. கண்ணோட்டம்

*பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க*
*நாகரிகம் வேண்டு பவர். (குறள் 580)*

யாவராலும் விரும்பத்தக்க கண்ணோட்டத்தினை வேண்டுவார், பிறர் தமக்கு நஞ்சிடுவதைக் கண்களால் கண்டும் அதனை உண்டு, பின்னும் அவரோடு இணைந்திருப்பர்.

### 59. ஒற்றாடல்

*ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்*
*தெற்றென்க மன்னவன் கண். (குறள் 581)*

ஒற்றரும், புகழ்பெற்ற அறநூலுமாகிய இரண்டும் தன் இரண்டு கண்களெனத் தெளிதல் வேண்டும்.

### 60. ஊக்கம் உடைமை

*வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்*
*உள்ளத் தனையது உயர்வு. (குறள் 595)*

நீர்ப்பூக்களின் தாளின் உயரம், நின்ற நீரின் அளவினதாகும்; அதுபோல மக்களின் உயர்வு, அவரது ஊக்கத்தின் அளவினதாகும்.

### 61. மடி இன்மை

*நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்*
*கெடுநீரார் காமக் கலன். (குறள் 605)*

விரைந்து செய்யவேண்டியதை நீட்டித்துச் செய்யும் இயல்பு, மறதி, சோம்பல், தூக்கம் ஆகிய நான்கும் கேடடைவார் விரும்பும் மரக்கலங்கள்.

### 62. ஆள்வினை உடைமை

*அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்*
*பெருமை முயற்சி தரும். (குறள் 611)*

நாம் இச்செயலைச் செய்துமுடித்தல் அருமை உடையதென்று எண்ணி ஒருவன் மனம் தளர்தல் கூடாது; அதனை முடித்தலுக்கேற்ற பெருமையைத் தன் முயற்சி உண்டாக்கும்.

### 63. இடுக்கண் அழியாமை

*இடுக்கண் வருங்கால் நகுக அதனை*
*அடுத்தூர்வது அஃதொப்பது இல். (குறள் 621)*

ஒருவனது செயலால் தனக்கு இடுக்கண் வரும்போது அதற்கு அஞ்சாது உள்ளம் மகிழ்தல் வேண்டும்; அவ்விடுக்கணைத் தள்ளி மேலும் மேலும் ஒருவனுக்கு ஆற்றலைத் தரவல்லது அம்மகிழ்ச்சியைத் தவிர வேறில்லை.

## 64. அமைச்சு

*கருவியும் காலமும் செய்கையும் செய்யும்*
*அருவினையும் மாண்டது அமைச்சு. (குறள் 631)*

ஒரு செயலை மேற்கொள்ளும்போது அதற்கு வேண்டிய கருவிகளும், அதற்கேற்ற காலமும், அதைச் செய்யும் முறையும், அவ்வழியில் செய்யப்படும் அரிய வினையும் ஆகியவற்றை எல்லாம் தக்கவாறு எண்ணவல்லவனே அமைச்சனாவான்.

## 65. சொல்வன்மை

*சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை*
*வெல்லும்சொல் இன்மை அறிந்து. (குறள் 645)*

தாம் சொல்லக்கருதிய சொல்லைப் பிறிதோர் சொல்லால் வெல்ல வல்லதொரு சொல்லின்மை அறிந்து, பின் அச்சொல்லைப் பயன்படுத்தல் வேண்டும்.

## 66. வினைத் தூய்மை

*ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க*
*சான்றோர் பழிக்கும் வினை. (குறள் 656)*

தன்னைப் பெற்றெடுத்த தாய் பசித்திருத்தலைக் காண்பான் ஆயினும் சான்றோர் பழிக்கும் செயல்களை ஒருவன் செய்தல் கூடாது.

## 67. வினைத்திட்பம்

*எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியார்*
*திண்ணியர் ஆகப் பெறின். (குறள் 666)*

எண்ணுபவர் வினைத்திட்பம் உடையவரானால், எண்ணிய பொருள்களையெல்லாம் தாம் எண்ணியவாறே பெறுவர்.

## 68. வினை செயல்வகை

*தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க*
*தூங்காது செய்யும் வினை. (குறள் 672)*

நீட்டித்துச் செய்யலாகும் செயல்களைக் காலம் தாழ்த்திச் செய்யலாம்; நீட்டியாது செய்ய வேண்டியவற்றைக் காலம் தாழ்த்தாது செய்தல் வேண்டும்.

## 69. தூது

*இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு*
*உறுதி பயப்பதாம் தூது. (குறள் 690)*

தன்னுயிர்க்கு இறுதி செய்யுமாயினும் அஞ்சி எச்சொல்லையும் விடாது, தன் அரசனுக்கு உறுதிபயப்பதைச் சொல்லவல்லவன் தூதனாவான்.

## 70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல்

*அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க*
*இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். (குறள் 691)*

எளிதில் பகையுணர்வுகொள்ளும் அரசரைச்சேர்ந்து அவரிடம் பணி செய்வார், அவரிடமிருந்து பெரிதும் விலகுவதும் அவரை மிகவும் நெருங்கியிருப்பதும் செய்யாது தீக்காய்வார்போல இடைநிலத்தில் நிற்றல் வேண்டும்.

## 71. குறிப்பறிதல்

*அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்*
*கடுத்தது காட்டும் முகம். (குறள் 706)*

தனக்கு முன்னிருக்கும் பொருளைத் தானே காட்டும் பளிங்குபோல் ஒருவனது நெஞ்சில் மிகுந்திருப்பதை அவன் முகம் தானே காட்டிவிடும்.

## 72. அவை அறிதல்

*அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்*
*தொகையறிந்த தூய்மை யவர். (குறள் 711)*

செஞ்சொல், இலக்கணச்சொல், குறிப்புச்சொல் என்னும் மூவகைச் சொற்களையும் அறிந்த தூய்மையினை உடையவர், ஒன்று சொல்லும்போது அப்பொழுதைய அவையினை அறிந்து ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

## 73. அவை அஞ்சாமை

*கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்*
*கற்ற செலச்சொல்லு வார். (குறள் 722)*

கற்றார் யாவரினும் இவர் தெளிவாகக் கற்றவரென்று உலகத்தாரால் சொல்லப்படுபவர், கற்றார் நிறைந்த அவையில் தாம் கற்றவற்றை அவர் மனம் கொள்ளுமாறு சொல்வார்.

## 74. நாடு

*பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்*
*அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. (குறள் 738)*

நோய் இல்லாமை, செல்வம், விளைச்சல், இன்பம், காவல் ஆகிய ஐந்தையும் நாட்டிற்கு அழகென்று சொல்வர்.

## 75. அரண்

*மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்*
*காடும் உடையது அரண். (குறள் 742)*

மணிபோலும் நிறத்தையுடைய நீரும், நிலமும், மலையும், நிழல்தரும் காடும் உள்ளதே நல்ல அரணாகும்.

## 76. பொருள் செயல்வகை

*செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்*
*எஃகதனில் கூரியது இல். (குறள் 759)*

தம் பகைவரது தருக்கினை அழிக்கும் கூரிய படைக்கலம் செல்வத்தைப்போன்று வேறொன்றும் இல்லையாதலால் ஒருவன் பொருளைப் பெருக்க வேண்டும்.

## 77. படை மாட்சி

*மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்*
*எனநான்கே ஏமம் படைக்கு. (குறள் 766)*

வீரம், மானம், முன் வீரர் சென்ற நன்னெறியில் செல்லுதல், அரசனால் தேறப்படுதல் ஆகிய நான்கு குணங்களுமே ஒரு படைக்குப் பாதுகாப்பாகும்.

## 78. படைச் செருக்கு

*பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்*
*ஊராண்மை மற்றதன் எஃகு. (குறள் 773)*

பகைவரோடு போரிடும் வீரமே பேராண்மை; பகைவருக்குத் தாழ்வு நேரும்போது அதனைத் தீர்க்க உதவும் ஊராண்மையே அதன் கூர்மை.

## 79. நட்பு

*உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே*
*இடுக்கண் களைவதாம் நட்பு. (குறள் 788)*

அவையில் ஆடைகுலைந்தவனுக்கு அவன்கை உடன்சென்று உதவுவது போன்று, நண்பனுக்குத் துன்பம் வரும்போது அப்போதே சென்று உதவி அத்துன்பத்தைப் போக்குவதே நட்பாகும்.

## 80. நட்பாராய்தல்

*கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை*
*நீட்டி அளப்பதோர் கோல். (குறள் 796)*

கேடு நம் நண்பர்களை முழுமையாக அளக்கும் அளவுகோலாகும்; ஆதலால் கேட்டிலும் ஒரு நன்மை உண்டு.

## 81. பழைமை

*பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்*
*கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. (குறள் 801)*

நீண்டநாளைய நண்பர்கள் உரிமையால் செய்யும் செயல்களைச் சிறிதும் சிதையாது ஏற்கும் நட்பே பழைமை.

## 82. தீ நட்பு

*கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு*
*சொல்வேறு பட்டார் தொடர்பு. (குறள் 819)*

செயலும் சொல்லும் வேறுவேறாய் இருப்பவரது நட்பு நனவில் மட்டுமல்லாமல் கனவிலும் இன்னாததாகும்.

## 83. கூடா நட்பு

*தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்*
*அழுதகண் ணீரும் அனைத்து. (குறள் 828)*

பகைவர் தொழுத கைகளிலும் அழுத கண்ணீரிலும் படைக்கலம் மறைந்திருக்கலாம்.

## 84. பேதைமை

*பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு*
*ஊதியம் போக விடல். (குறள் 831)*

தனக்குக் கேடுதருவனவற்றை ஏற்று, ஆக்கம் தருவனவற்றைக் கைவிடுவதே பேதைமை.

## 85. புல்லறிவாண்மை

*உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து*
*அலகையா வைக்கப் படும். (குறள் 850)*

உயர்ந்தோர் பலரும் உண்டென்று சொல்லும் பொருளை இல்லையென்று சாதிப்பவன் உலகில் காணப்படும் பேயென்று எண்ணப்படுவான்.

## 86. இகல்

*இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்*
*பண்பின்மை பாரிக்கும் நோய். (குறள் 851)*

எல்லா உயிர்களிடமும் கூடி வாழாமை என்னும் தீக்குணத்தை வளர்க்கும் நோயே இகல்.

## 87. பகை மாட்சி

*வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா*
*மெலியார்மேல் மேக பகை. (குறள் 861)*

தம்மினும் வலியவரைப் பகைத்தலைத் தவிர்க்க வேண்டும் என்பது இக்குறளின் முதன்மைக் கருத்து; பகைமை பற்றிய வள்ளுவரின் நடைமுறைப் பார்வையை இது காட்டுகிறது.

## 88. பகைத்திறம் தெரிதல்

*பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்*
*நகையேயும் வேண்டற்பாற்று அன்று. (குறள் 871)*

பகை என்னும் தீய பண்பை ஒருவன் விளையாட்டாகக்கூட விரும்பக் கூடாது.

## 89. உட்பகை

*உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்*
*பாம்போடு உடனுறைந் தற்று. (குறள் 890)*

மனப்பொருத்தம் இல்லாதவரோடு கூடி வாழ்வது ஒரு குடிலுக்குள் பாம்போடு கூடி வாழ்வதைப் போன்றது.

## 90. பெரியாரைப் பிழையாமை

*பெரியாரைப் பேணாது ஒழுகிற் பெரியாரால்*
*பேரா இடும்பை தரும். (குறள் 892)*

ஆற்றலால் பெரியவரை மதியாது நடப்பவருக்கு அவரால் நீங்காத துன்பங்கள் விளையும்.

## 91. பெண்வழிச் சேறல்

*மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழையார்*
*வேண்டாப் பொருளும் அது. (குறள் 901)*

இன்பத்தைமட்டுமே நாடிக் கடமையை மறப்பவர் சிறந்த பயனை அடையமாட்டார்; செயல்முனைப்புடையோர் விரும்பாததும் அதுவே.

## 92. வரைவின் மகளிர்

*அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்*
*இன்சொல் இழுக்குத் தரும். (குறள் 911)*

அன்பால் அன்றிப் பொருளுக்காக மட்டுமே விரும்புவோரின் இனிய சொல் பின்னாளில் துன்பமே தரும்.

## 93. கள்ளுண்ணாமை

*கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்*
*உள்ளான்கொல் உண்டதன் சோர்வு. (குறள் 930)*

கள்ளுண்பவன் தெளிந்திருக்கும்போது மற்றொரு குடிகாரனைக் கண்டும், தானும் அவ்வாறுதான் சோர்வுறுவேன் என உணரமாட்டானோ?

### 94. சூது

*வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்*
*தூண்டிற்பொன் மீன்விழுங்கி அற்று. (குறள் 931)*

வெல்லமுடிந்தாலும் சூதை விரும்பக் கூடாது; அதில் வெல்லும் பொருள், இரையென்று எண்ணி மீன் தூண்டில் இரும்பை விழுங்கியது போன்றது. இணையவழிச் சூதாட்டங்கள் பெருகிய இன்றும் இது பொருந்தும்.

### 95. மருந்து

*மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்*
*ஊறுபாடு இல்லை உயிர்க்கு. (குறள் 945)*

உடலுக்கும் காலத்திற்கும் ஏற்ற உணவை அளவறிந்து உண்பவனுக்குப் பிணியால் துன்பம் நேராது.

### 96. குடிமை

*இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்*
*செப்பமும் நாணும் ஒருங்கு. (குறள் 951)*

நேர்மையும் நாணமும் ஒருங்கே இயல்பாக அமைவது நல்ல குடியில் வளர்ந்தவரிடமே.

### 97. மானம்

*மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்*
*உயிர்நீப்பர் மானம் வரின். (குறள் 969)*

ஒரு மயிர் நீங்கினும் உயிர்வாழாத கவரிமானை ஒத்தவர், மானம் அழிய நேர்ந்தால் அதைத் தாங்கமாட்டார்.

### 98. பெருமை

*பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான். (குறள் 972)*

எல்லா உயிர்களும் பிறப்பால் ஒத்தவை; செய்யும் தொழிலின் வேறுபாடே சிறப்பை வேறுபடுத்துகிறது.

### 99. சான்றாண்மை

*ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்*
*மாற்றாரை மாற்றும் படை. (குறள் 985)*

செயலாற்றல் உடையாரின் ஆற்றல் பணிவுடைமையே; அந்தப் பணிவே சான்றோர் பகைவரையும் நண்பராக்கும் கருவி.

## 100. பண்புடைமை

*அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்*
*மக்கட்பண்பு இல்லா தவர். (குறள் 997)*

மனிதப் பண்பற்றவர் அரம்போன்ற கூரிய அறிவுடையராயினும் மரத்தையே ஒப்பர்.

## 101. நன்றியில் செல்வம்

*வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்*
*செத்தான் செயக்கிடந்தது இல். (குறள் 1001)*

வீடு நிறையப் பொருளைச் சேர்த்தும் அதனைத் துய்க்காதவன், அப்பொருளோடு உறவில்லாமையால் செத்தவனையே ஒப்பான்.

## 102. நாணுடைமை

*கருமத்தால் நாணுதல் நாணும் திருநுதல்*
*நல்லவர் நாணுப் பிற. (குறள் 1011)*

நன்மக்கள் நாணுவது இழிந்த செயலைச் செய்வதற்கே; மற்ற நாணம் அடக்கத்தின் வெளிப்பாடு மட்டுமே.

## 103. குடிசெயல் வகை

*கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்*
*பெருமையின் பீடுடையது இல். (குறள் 1021)*

தன் குடியை உயர்த்தத் தொடங்கிய செயலை முடிக்காமல் விடேன் என்னும் உறுதியைப் போலச் சிறந்த பெருமை வேறில்லை.

## 104. உழவு

*சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை. (குறள் 1031)*

உலகம் எத்தொழிலில் சுழன்றாலும் இறுதியில் ஏரையே சார்ந்து நிற்கிறது; எனவே உழவே தலைசிறந்த தொழில்.

## 105. நல்குரவு

*இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்*
*இன்மையே இன்னா தது. (குறள் 1041)*

வறுமையைப்போலத் துன்பம் தருவது வறுமையே; அதற்கு இணையான துன்பம் வேறில்லை.

## 106. இரவு

*இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்*
*அவர்பழி தம்பழி அன்று. (குறள் 1051)*

கொடுக்கத் தக்கவரிடம் இரக்கலாம்; அவர் கொடாது மறைத்தால் அது அவருக்குப் பழியே; இரந்தவருக்குப் பழியாகாது.

## 107. இரவச்சம்

*இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
*கெடுக உலகியற்றி யான். (குறள் 1062)*

உலகில் சிலர் இரந்துதான் வாழ வேண்டும் என விதித்திருந்தால், அவ்வுலகைப் படைத்தவனே அலைந்து கெடுவானாக — வறுமைக்கு எதிரான வள்ளுவரின் சீற்றம்.

## 108. கயமை

*மக்களே போல்வர் கயவர் அவரன்ன*
*ஒப்பாரி யாம்கண்டது இல். (குறள் 1071)*

கயவர் உருவத்தில் மக்களையே முழுமையாக ஒத்திருப்பர்; இத்தகைய ஒப்புமையை வேறெங்கும் கண்டதில்லை.